# வேத பாரதி செய்திகள்

VEDABHARATHI SEITHIGAL Tamil Monthly தமிழ் மாத இதழ்

| | | | |
|---|---|---|---|
| மலர் : 8 | இதழ் :1 | அக்டோபர் : 2023 | ரூ.20/- |
| Volume: 8 | Issue : 1 | October : 2023 | Rs.20/- |


வாசகர்களின் மேலான ஆதரவோடு

வேதபாரதி செய்திகள்

10 ஆவது

ஆண்டு துவக்கம்

# SHRI MAHA MERU MANDALI TRUST

Reg. No.DIT (E) No.2 (651) 12-13/Sl.No.90/13-14



# அஷ்டோத்ர ஸத சுக்ர வார ஸ்ரீ லலிதா ஸஹஸ்ர நாம பாராயணம்

**57வது பாராயணம் - 08.09.2023 வெள்ளிக்கிழமை**

**ஸ்ரீ 108 சக்தி பீட கோவில்**

மங்களாபுரி க்ஷேத்திரம், கண்ணன்தாங்கல், காஞ்சிபுரம்.

**58வது பாராயணம் - 15.09.2023 வெள்ளிக்கிழமை**

**ஸ்ரீ காமாட்சி அம்மன் சமேத ஸ்ரீ வெள்ளீஸ்வரர் திருக்கோயில்**

மயிலாப்பூர், சென்னை.

**59வது பாராயணம் - 22.09.2023 வெள்ளிக்கிழமை**

**சிவாகாமி சுந்தரி சமேத தில்லை ஆனந்த நடராஜசுவாமி திருக்கோவில்**

சிதம்பரம்

**60வது பாராயணம் - 29.09.2023 வெள்ளிக்கிழமை**

**கனகாம்பிகை அம்பாள் சமேத ஸ்ரீகைலாசநாதர் சுவாமி திருக்கோவில்**

பரமேஸ்வரமங்கலம், செங்கல்பட்டு.

---

தங்கள் வீடுகளுக்கு அருகில் உள்ள ஆலயங்களில் வெள்ளிக்கிழமைகளில் மண்டலி சார்பாக ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாம பாராயணம் செய்திட அனுக வேண்டிய எண்.

**9443495950, 9444060346**

# வேதபாரதி
## செய்திகள்



காயத்ரீ தேவி

**வியனுலகனைத்தையும் அமுதென நுகரும்**
**வேத வாழ்வினைக் கைப்பிடித்தோம்.** மஹாகவி பாரதி

# அறிவோம் வேதம்

இந்தப் பகுதியில் ஒவ்வொரு மாதமும் ஒரு வேதமந்திரமும் அதற்குண்டான பொருளும் வழங்கப்படும்.

## வேதமந்திரம் - 50

**ஆ நோ ப$^{4}$த்$^{3}$ரா : க்$^{1}$ரத$^{1}$வோ யந்து$^{1}$**
**விஷ்வதோ$^{1}$த$^{3}$ப்$^{3}$தா$^{4}$ஸோ அப்$^{1}$ரீதா$^{1}$ஸ உத்$^{3}$பி$^{4}$த$^{3}$:**
**தே$^{3}$வா நோ யதா$^{2}$ ஸத$^{3}$மித்$^{3}$ வ்ருதே$^{4}$**
**அஸந்நப்$^{1}$ராயுவோ ரக்ஷிதா$^{1}$ரோ தி$^{3}$வே தி$^{3}$வே:**

**- ரிக் வேதம் – ஆ நோ பத்ரா ஸூக்தம்**

பொருள் : அறியாமை, ஐயம், திரிபு ஆகியற்றைநீக்கவல்ல நல்லெண்ணங்கள் நான்கு திசைகளிலிருந்தும் நம்மை நோக்கி வரட்டும். முறையான வாழ்வைப் பின்பற்றுபவர்களை விட்டு நீங்காத தேவர்கள். நம் அனைவருக்கும் இடைவிடாத இன்பத்தைப் பெருகச் செய்து, நம்மைப் பாதுகாப்பவர்களாக விளங்கட்டும்

|| ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி: |

# வேதபாரதி செய்திகள்

**(ஆன்மீக மாத இதழ்)**

மலர்: 8 இதழ்: 1

அச்சிட்டு வெளியிடுபவர்
பதிப்பாளர், ஆசிரியர்

**ஆர்.வெங்கட்ராமன்**
27, F1 அன்னை இந்திரா நகர்,
வேளச்சேரி, சென்னை - 600 042.
செல்: 94434 95950

அச்சகம்
**சபாநாயகம் பிரிண்டர்ஸ்**
39, மில்லர்ஸ் சாலை, கீழ்ப்பாக்கம்,
சென்னை - 600 010.

REGD No : TN/CC(S) / DN / 571 / 21-23

RNI No : 1282188

Title Code : TNTAM/2016/73726

R.Dic.No.1845/2015

**VEDABHARATHI SEITHIGAL**

(Tamil Monthly Magazine)

Published on : 1-7th (1st Week) Every Month

TN/PM G (CCR) / WPP 605/21-23 /
Valid from 01.01.2021 to 31.12.2023

புத்தக வடிவமைப்பு :
**ரெம்ஸ் டிஜிட்டல் பிரஸ்**
நெ.17, பாரதிதெரு, இந்திராநகர்,
காமராஜபுரம், வேளச்சேரி,
செ - 42. போன்: 9025864231


## புத்தகத்தின் உள்ளே


| | |
|---|---|
| வாழ்த்துக்கள் | 6 |
| உங்கள் சிந்தனைக்கு | 20 |
| ஐப்பசி மாத விசேஷங்கள் | 22 |
| அட்டைப்பட விளக்கம் | 23 |
| ஸ்ரீமத் பகவத்கீதை | 28 |
| ஸ்ரீமத் பாகவதம் | 31 |
| ஆதிசங்கரர் | 33 |
| அறுபத்தி மூன்று நாயன்மார்கள் | 35 |
| மூதுரை (ஔவையார்) | 38 |
| சிருங்கேரி மஹா சுவாமிகள் | 47 |
| தர்மத்தின் குரல் | 48 |
| மஹாபெரியவாளின் அற்புத விளக்கங்கள் | 50 |
| அறிவோம் ஆழ்மனதின் | 52 |
| ஆசான் | 54 |
| அட்ட வீரட்டத் தலங்கள் | 56 |
| பெற்றோர்களே கவனியுங்கள் | 59 |
| சாதனைப்பறவைகள் | 63 |
| இராமாயணம் தரும் படிப்பினை | 66 |
| தருவின் நிழலில் | 68 |
| ஒப்பன்ஹெய்மர் | 71 |
| ஆரோக்கியம் | 79 |



**சந்தா விவரம்**

| | |
|---|---|
| வருட சந்தா | ரூ.200 |
| 10 வருட சந்தா | ரூ.1500 |

வங்கி மூலம் புத்தக சந்தா வழங்கிட

**VEDABHARATHI**
**City Union Bank, Velachery Branch**
**A/c No. 510909010005286**
**IFSC : CIUB 0000262**



நிர்வாக முகவரி:
எண்.31, சேஷாத்திரிபுரம்
1வது மெயின் ரோடு, பேபி நகர்,
வேளச்சேரி, சென்னை - 600 042.

**D. சூரியநாராயணன்**
**Cell : 98841 05302**

**R. வெங்கட்ராமன்**
**Cell : 94434 95950**

**Email:vedabharathichennai@gmail.com**
**Website: www.vedabharathi.org**

# வேதபாரதி

(பாரதப் பண்பாட்டு அமைப்பு)

# “வேதபாரதி செய்திகள்” – 10 ஆம் ஆண்டு

*பாரதப் பண்பாட்டு அமைப்பான* **“வேதபாரதி’’** *யின் மாதாந்திர ஆன்மீக பத்திரிகையான* **“வேதபாரதி செய்திகள்”** *ஆரம்பித்து ஒன்பது ஆண்டுகள் முடிந்து இந்த மாதம் (2023 அக்டோபர்)* **பத்தாம் ஆண்டில்** *அடி எடுத்து வைக்கிறது. இத்தருணத்தில்* **“வேதபாரதி செய்திகள்”** *பத்திரிகையின் அன்பான சந்தாதாரர்களுக்கும், வாசகர்களுக்கும்,*

*பத்திரிகைக்கான செய்திகளை வடிவமைத்து தட்டச்சு செய்து கொடுக்கும் வேளச்சேரி,* **“ரெம்ஸ் டிஜிட்டல் பிரஸ்”** *நிறுவனத்திற்கும்.....*

*பத்திரிகையை புத்தகவடிவில் சிறப்பாக அச்சடித்து தரும்* **சென்னை சபாநாயகம் பிரிண்டர்ஸ்** *உரிமையாளர் அவர்களுக்கும், விளம்பரங்கள் மூலம் பேராதரவை அளித்துவரும் நிறுவனங்களுக்கும், பத்திரிகை மாதாமாதம் சிறப்பாக வெளிவர அயராது பாடுபடும் வேதபாரதி உறுப்பினர்களுக்கும்......*

வேதபாரதியின் அன்பான வாழ்த்துக்கள்

**ஆசிரியர், புத்தகக்குழு**

# நெரூர் ஸ்ரீ வித்யா சங்கர ஸரஸ்வதி ஸ்வாமிகள் அருளுரை

புத்தகங்கள் என்பது இன்றைய கால கட்டத்தில் குறைந்து கொண்டே வருகிறது. அந்த காலத்தில் எல்லோருக்கும் புத்தகங்கள் மீது ஓர் ஆவல், விருப்பம் இருந்தது. இன்றைக்கும் சரஸ்வதி பூஜையில் புத்தகங்களை வைத்து சரஸ்வதி தேவியை ஆவாஹனம் செய்து பூஜிக்கும் பழக்கம் உள்ளது. சமஸ்க்ருதத்தில் ஓர் வசனம் உண்டு "புஸ்தகம் ஹஸ்த பூஷணம்" "கையில் இருக்கும் அழகிய ஆபரணம் புத்தகம்" என்று பொருள். முற்காலத்தில் புத்தகத்தை எப்படி பிரிக்க வேண்டும். பராமரிக்க வேண்டும் என வழிமுறைகள் உண்டு. சிலர் புத்தகத்தில் உள்ள சில பகுதிகளை நினைவு கூர்ந்து படிக்க அந்த பக்கத்தை மடித்து வைப்பர். இந்த முறை புத்தகத்தின் ஆயுளை குறைக்கும்.

ஒரு குழந்தை தேர்வு எழுதியபின் அந்தப் புத்தகங்களை பத்திரப்படுத்தி அடுத்த வருடம் மற்ற குழந்தைக்கு தரும் பழக்கம் இன்றளவும் இருந்து வருகிறது. புத்தகங்களை சரியான முறையில் பராமரிக்க வேண்டும்.

நாம் எல்லா விஷயங்களையும் புத்தகத்தில் தேடித்தேடி படிக்க இயலாது என்பதால் தான் நம் சனாதன தர்மங்கள் பற்றி தொகுத்து மாத சஞ்சரி (மாத இதழ்)யாக வெளியிடுகின்றனர். அந்த வகையில் "வேதபாரதி" இதழானது ஸ்ரீமத் பாகவதம் ஸ்ரீ பகவத்கீதை, நாயன்மார்கள் வரலாறு போன்றவற்றை தொகுத்து வெளியிடுகின்றனர்.

தேனீக்கள் எப்படி மலர்களில் தேனை தேடித்தேடி சேகரிக்கிறதோ, அதுபோல சனாதன தர்மத்தில் உள்ள கருத்துக்களை அனைவரும் அறிந்து

கொள்ள வேண்டும் என பதிவிடுகின்றனர்.

அந்த காலத்தில் புத்தகத்தில் ஒரு விஷயம் பதிவிடுகின்றனர் என்றால் அது பிரமாணம் என்று பொறுப்புடன் பாதுகாத்து வைத்துக் கொண்டனர். அதில் சிறு தவறு ஏதேனும் நிகழ்ந்துவிட்டால் நேரில் சென்று இது பிழையான தகவலா என கேட்டு தெளிவு படுத்துவர்.

புத்தகத்தில் பிழைகள் இருந்தால் அச்சிடும் போது ஒரு பக்கத்தில் பிழைகள் நேர்ந்துவிட்டது என தெரியப்படுத்த வேண்டும். அந்த காலத்தில் பெரியவர்கள் புத்தகங்கள் எழுதும் போது நான் எழுதிய இப்புத்தகத்தில் தவறுகள் இருக்கும் பக்ஷத்தில் அவசியம் தெரியப்படுத்துமாறு குறிப்பிடுவார்கள். இது பத்திரிக்கை தர்மமாகும்.

நவீன சாதனங்கள் பெருகிவிட்ட இந்த கால கட்டத்தில் இந்த மாதிரியான மாத சஞ்சரிகள் அவசியம் தேவை. முற்காலத்தில் மாத இதழ்களில் இருந்து வெளியிடப்படும் ஸ்லோகங்கள், தொடர் கட்டுரைகள் சேகரித்து வைப்பது பழக்கமாக இருந்தது.

மாத சஞ்சரிகளுக்கு நாம் முக்கியத்துவம் தர வேண்டும். வேதபாரதி இதழ் மாதா மாதம் வெளியிடப்படுகிறது. இந்த இதழானது 10ம் ஆண்டில் அடி எடுத்து வைப்பதனால், பல தர்ம காரியங்களை செய்து வரும் வேதபாரதிக்கு எல்லோரும் தொடர்ந்து ஆதரவு அளித்து மேலும் வளர ஒத்துழைப்பு அளிக்க வேண்டும்.

இது போன்ற தர்ம காரியங்களில் ஈடுபட்டு பகவானின் அனுக்ரஹத்தை அனைவரும் பெறவேண்டும். நாம் அனைவரும் சனாதன தர்மத்தை கடைபிடித்து நம் சந்ததிகளுக்கும் வழிகாட்ட வேண்டும்.

தற்காலத்தில் குழந்தை வளர்ப்பில் சிரமம் இருந்தால் நாம் மருத்துவரை ஆலோசனை கேட்கிறோம். மருத்துவர் குழந்தைகளுக்கு கதைகள் கூறி அவர்களுடன் நேரத்தை செலவிட வேண்டும் என கூறுகின்றனர்.

கதை சொல்லும் பழக்கம் நமது வாழ்வியல் முறையில் இருந்தது. இந்த வழக்கம் மறைந்ததனால் தான் நாம் மருத்துவர் ஆலோசனை பெறுகிறோம்.

மாத சஞ்சரியில் வரும் நல்ல விஷயங்களை பெரியவர்கள் தெரிந்து கொண்டு குழந்தைகளுக்கு சொல்லித்தர வேண்டும். வேதபாரதி இதழானது மேன்மேலும் வளர வேண்டும். இதற்கு எல்லோரும் ச்ரத்தையுடன் ஆதரிக்க வேண்டும்.

ஹரி ஓம்.

உ

ஸ்ரீ குருப்யோ நம:

**வேதபாரதி**

**கோடி காயத்ரீ ஜப யக்ஞம், கோவை**

நாள் : 28.10.2023 இடம் : ஸ்ரீ ஐயப்பன் பூஜா சங்கம் ராம்நகர், கோவை.

குடும்பத்துடன் கலந்து கொள்ள அன்புடன் அழைக்கிறோம்.

மேலும் தொடர்புக்கு : **9443495950 / 98402 01625**

பிரதி வாரம் 5 நாட்கள் வேத வகுப்புகள் நடந்து கொண்டிருக்கின்றன. வார இறுதி நாட்களிலும் தனி வேத வகுப்புகள் ருக், யஜுர், சாம, வேதங்களும் நடந்து கொண்டுள்ளது.

தொடர்புக்கு : **ஸ்ரீ சங்கர் - 94451 02193**

La. Ganesan
Governor of Nagaland

सत्यमेव जयते

RAJ BHAVAN
Kohima - 797001

உ

21.9.2023

அன்புள்ள திரு ஆர். வெங்கட்ராமன்,

வணக்கம்.

வேதபாரதி இதழ் தொடர்ந்து எனக்கு அனுப்பி வைக்கிறீர்கள் என்பது மகிழ்ச்சிக்குரிய விஷயம். நானும் தவறாமல் படித்து வருகிறேன். அதில் தேவையற்ற விஷயம் என்று எதுவும் இல்லை. பல்வேறு கோணங்களில் பல்வேறு விஷயங்கள், எளிமையான மொழியில் எல்லோரும் புரிந்து கொள்ளும் வகையில் வெளியிட்டு தொண்டு செய்து வருகிறீர்கள்.

பத்திரிகை பத்தாம் ஆண்டில் அடி எடுத்து வைக்கிறது என்பது மகிழ்ச்சியான விஷயம். தொடர்ந்து பல்லாண்டுகள் இன்னும் சிறப்பாக தொண்டு புரிய இறைவன் அருள் புரிவாராக!

வாழ்த்துக்கள்.

(இல. கணேசன்)

Tel : +91-370-2242881 (O) +91-370-2242898 (Fax) Email : rajbhavankohima@nic.in

C.P. Radhakrishnan

RAJ BHAVAN
RANCHI-834001
JHARKHAND

GOVERNOR OF JHARKHAND

11th September, 2023

**வாழ்த்துரை**

வேதபாரதி செய்திகள் ஆன்மீக கலாச்சார மாத இதழ் 9 ஆண்டுகள் நிறைவு செய்து 10-வது ஆண்டில் அடிவைக்கிறது.

பொதுமக்கள் தங்களை மேம்படுத்திக்கொள்ள நல்ல ஆன்மீக கருத்துக்களையும், பாரதப்பண்பாட்டு கலாச்சாரத்தையும் அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்லும் பணிகளை இந்த பத்திரிகை தொடர்ந்து வெளியிடுவது மிக்க மகிழ்ச்சி.

தொடர்ந்து நல்ல பல உயர்வான கருத்துக்களை எடுத்துச்சொல்லும் வேதபாரதி செய்திகள் மாத ஆன்மீக பத்திரிகை தொடர்ந்து பல ஆண்டுகள் வெளியிட அன்புடன் வாழ்த்துகிறேன்.

அன்புடன்,

(சி. பி. ராதாகிருஷ்ணன்)

M. சிவசங்கர்
சட்டப்பேரவை உறுப்பினர்
புதுச்சேரி

அலுவலகம் : 0413-2200440
கைபேசி : 94432 39933
எண் 12, முதல் குறுக்குத் தெரு
விவேகானந்தா நகர்
புதுச்சேரி-605 005
மின்னஞ்சல் : msivasankarmla@gmail.com

தேதி: 23/09/2023

இன்றைய தமிழ் பத்திரிக்கை துறையில் பரபரப்பு, கவர்ச்சி, எதிர்மறை, அவதூறு ஆகியவற்றை மூலக்கருவாக ஏற்றே பெரும்பாலும் செய்திகள் வருகின்றன.

இவற்றில் சில விதிவிலக்குகளோடும் நற்செய்திகளைத் தாங்கி வருகின்றன. அதில் "வேதபாரதி செய்திகளும்" ஒன்று.

தர்மம், ஒழுக்கம், நெறி இவற்றிற்கு ஆன்மீகம் மூலப் பொருள். அவற்றை அடிப்படையாக கொண்டதே பாரதப் பண்பாடும் கலாச்சாரமும்.

சீரழிந்து வரும் இன்றைய தமிழ் சமூகத்திற்கு பாரதப் பண்பாட்டை புத்துயிராக ஊட்டி வரும் **"வேதபாரதி செய்திகள்"** தமிழ் திங்களிதழ், தன் நோக்கத்தின் பாதை தவறாது கடந்த ஒன்பதாண்டுகளாக பயணித்து வருவது பத்திரிக்கை உலகில் பெரும் சவாலான ஒன்று.

தற்போது பத்தாம் ஆண்டில் பயணிக்கத் துவங்கும் இவ்விதழ், தொடர்ந்து தலைமுறைக்கும் தர்மத்தின் வழிகாட்ட நெஞ்சார வாழ்த்துகிறேன்.

தொடரட்டும் பாரத பண்பாட்டின் அறப்பணி.

வாழ்த்துகளுடன்.

M. Sivasankar

**M. சிவசங்கர்**
உறுப்பினர்
சட்டப்பேரவை
புதுச்சேரி

திரு. ஆசிரியர் அவர்கள்,
வேதபாரதி செய்திகள்,
சென்னை

## வாழ்த்துக்கள்

### *வேதபாரதி வெல்க!*

*1. பாரதத்தின் பண்புகள்தாம் மனத்தில் நன்றாய்ப்*
*பதிகின்றவகையினிலே எடுத்து ரைத்துச்*
*சீருடனே செய்திகளை விளக்கிக் கூறும்*
*சீர்வேத பாரதியை வாழ்த்து கின்றேன்.*

*2. பண்டிகைகள் உட்கருத்தை விளக்கிக் கூறி,*
*பாகவதச் செய்தியையும் எடுத்துக் கூறி,*
*விண்டுரைக்க முடியாத நுட்பம் தன்னை*
*விளக்குகின்றமுறைகளினைப் போற்று கின்றேன்*

*3. வேதங்கள், புராணங்கள், பகவத் கீதை*
*விளக்குகின்றமேலான கருத்தைக் கூறித்*
*தீதொதுக்கி நன்மையினை ஏற்றுக் கொள்ளச்*
*சிறப்பாக வழிகாட்டும் தன்மை நன்றே!*

*4. சங்கரரின் மேலான கருத்தை எல்லாம்*
*தக்கபடி எடுத்துரைக்கும் விதமும் நன்றே!*
*எங்கெங்கும் என்றென்றும் எல்லோ ருக்கும்*
*ஏற்புடைய செய்திதரும் விதமும் நன்றே!*

*5. நல்லுள்ளம் கொண்டோரின் உதவியாலும்*
*நன்றாகக் கட்டுரைகள் வடிப்போராலும்*
*இல்லத்துச் சிறுவர்க்கும் உயர்வு காட்டும்*
*இவ்வேத பாரதிதான் வெல்க! வாழ்க!*

*அன்புடன்*

**ஜெ. ஞானபூபதி**
*தமிழ்ப் பேராசிரியர்*
*விவேகானந்தா வித்யாலயா, திருப்பூர்*

**SRI SANKARA VIDYALAYA**
**HIGHER SECONDARY SCHOOL**
(A Unit of Sri Sankara Educational Trust, Chennai)
(Recognised by the Government of Puducherry)
Sri Kanchi Kamakoti Complex, Maduvapet, Lawspet, Puducherry - 605 008
Phone : 0413 - 2250123, 2252467 | e-mail : srisankara.vidyalaya9@gmail.com

Ref : S.S.V

Date : 27.09.2023

“மக்களுக்கு செய்யும் தொண்டே மகேசனுக்கு செய்யும் தொண்டாகும்”. எனவே மக்களிடம் பக்தி, இறைநம்பிக்கை, தர்மம், ஒழுக்கம், ஆகியவற்றை வளர்க்கும் பொருட்டு “வேதபாரதி” பல பணிகளை புரிந்து வருகிறது.

இன்றைய சூழலில் நம் பாரதம் பாரினில் சிறந்து விளங்க வேண்டுமெனில் நாட்டின் தூண்களாக விளங்கும் மாணவர்களை நல்வழிப்படுத்தினால் மட்டுமே சாத்தியம் என்பதை கருத்தில் கொண்டு கொன்றை வேந்தன், ஆத்திசூடி, மூதுரை ஆகிய நூல்களில் உள்ள பாடல்களை மனப்பாடம் செய்ய வேண்டும் என்ற நோக்கில் பல்வேறு போட்டிகளை நடத்தி மாணவர்களை “வேதபாரதி” ஊக்குவித்து வருகிறது.

“மாதங்களில் நான் மார்கழி” என்று கிருஷ்ணபகவான் குறிப்பிட்டுள்ளார். அப்படிப்பட்ட மிகப் புனிதமான மார்கழி மாதம் முழுவதும் அதிகாலை வேளையில் பள்ளி மாணவர்கள் மூலம் புதுவையின் பல்வேறு பகுதிகளுக்குச் சென்று பஜனைகள் செய்து மக்கள் மனதில் இறைபக்தியை

“வேதபாரதி” வளர்த்து வருகிறது.

தொடரட்டும் வேதபாரதியின் இறைபணி.

வளரட்டும் மாணவர்களின் ஆன்மீக நெறி.

பத்தாம் ஆண்டில் அடி எடுத்து வைக்கும் வேத பாரதியின் ஆன்மீக இதழ் சிறக்க வாழ்த்துகிறோம்

**CORRESPONDENT**
**SRI SANKARA VIDYALAYA**
**HIGHER SECONDARY SCHOOL**
**Puducherry**

## வாழ்த்துக்கள்

*"பாரதப் பண்பாட்டு அமைப்பு" என்ற பீடுமிகு கருத்துக் கருவூலத்தின் வெளியீடாக விளங்கும் "வேதபாரதி செய்திகள்" பத்தாம் ஆண்டில் பாதம் பதிப்பது கண்டு பெருமகிழ்ச்சி அடைகிறேன்.*

*குழந்தைகள், இளைஞர்கள், பெரியோர்கள், சிறியோர்கள், முதியோர் என எல்லாத் தரப்பினருக்கும் தேவையான விஷயங்களைத் தருகிற இவ்விதழுக்கு இதமான பாராட்டுக்கள். வேதபாரதி தொடாத பொருளில்லை. வேதப் பொருளின் விரிவு, மந்திரங்களின் மகத்துவம், ஆன்றோர் அமுத மொழிகள், மருத்துவ மணம், மாணவர் மெருகேற்றல், காயத்ரீ மாதாவின், அகம், புறம் முதலிய சங்க நூல்கள் கூறும் உயர் கருத்துக்கள் ஆகியவையெல்லாம் பூஜ்யஸ்ரீ பரமானந்த பாரதி அவர்களின் "தர்மத்தின் குரலாய்" தொட்ட இடமெல்லாம் தட்டுப்படும் பாங்கு போற்றுதற்குரியது.*

*உயர்திரு.வெங்கட்ராமன் அவர்களின் சேவையையும், ஆளுமையையும் பாராட்ட வார்த்தை வலு என்னிடம் இல்லை. அவருக்கும் அவருக்குத் துணைநிற்கும் நிர்வாகக் குழுவிற்கும், வாழ்த்துரை என்பதைவிட, என்னுடைய வணக்கவுரையைக் காணிக்கையாக்குகிறேன். இறைவன் அருள்க. ஸ்வாமிஜியின் அருள் நம்மைக் காப்பதாக.*

*அன்புள்ள,*

**என்.ஆர்.ஸத்யமூர்த்தி,**

*கடலூர், 9344499158*

## வாழ்த்துக்கள்

*மாதாந்திர ஆன்மீக இதழ் வேதபாரதி கடந்த 9 ஆண்டுகளாக இந்து தர்மத்தின் உயர்ந்த கொள்கைகளை பரப்பி வருகிறது. 9 என்றால் ஆன்மீக அறிவு, உயர்ந்த விழிப்புணர்வு மற்றும் தன்னலமற்ற தன்மை போன்ற பல்வேறு கருத்துக்களைக் குறிக்கிறது. வேதபாரதிக்கு பல ஆச்சாரியர்களின் ஆசிகள் உண்டு. இந்த நேரத்தில், பூஜ்ய சுவாமி பரமானந்த பாரதி அவர்கள், ஸ்ரீ சூர்யநாராயணன் தலைமையிலான ஆசிரியர் குழுவிற்கும், ஸ்ரீ வெங்கட்ராமனுக்கும், வாசகர்களுக்கும், இந்த தெய்வீக இதழான வேதபாரதிக்கும் ஆசி வழங்குவதில் மிகவும் மகிழ்ச்சியடைந்திருப்பார். வேதபாரதியை மேலும் மேலும் ஆதரிப்பது நமது கடமையாகும்.*

**எம்.வி.சத்தியநாராயணா,** *ஐ.ஐ.டி. சென்னை.*

---

## வாழ்த்துக்கள்



*ஸ்ரீ குருப்யோ நம : வேதபாரதி பத்திரிகை செய்திகள் பத்தாவது ஆண்டு அடியெடுத்து வைப்பதில் மிக மகிழ்ச்சியடைகிறேன். நிகழ்வது எல்லாம் இறைவனின் செயல். வேதபாரதி கடந்த ஆண்டுகளில் பெரியோர்களின் மேன்மையை துணையாகபற்றி, செயல்கள் யாவும் கல்லைச் செதுக்கி உயிர்ததும்பும் உருவச்சிற்பி அமைப்பது போன்று உள்ளத்தைத் திருத்தி யாவரும் தெய்வீக அருள்பெறுமாறு அமைந்து வருகிறது. சிவலோகம் என்னும் நன்னிலத்திலே யாவரும் பேரானந்தத்தை பெறுவோமாக!*

**ஸ்ரீ ராமசுப்பிரமணியம்,**

*மூத்த உறுப்பினர், வேதபாரதி, கிழக்கு தாம்பரம்*

## வாழ்த்துக்கள்

*வேதபாரதி இதழின் முதலாமாண்டு முதல் புத்தகத்தை படித்து வரும் வாசகர்களில் நானும் ஒருவன். இன்றைய கால கட்டத்தில் பெரியோர்களுக்கும், குழந்தைகளுக்கும் என்ன தேவை, என்ன செய்ய வேண்டும் என்பதை தெளிவாக வெளியிடுகின்றனர். எல்லா குருமார்களின் அருளாசியும், ஸ்லோக வகுப்புகள், சந்த்யா வந்தன பயிற்சி முகாம்கள் போன்றவை பல ஊர்களில் நடத்தி, எல்லா ஊர்களிலும் ஓர் தன்னலமற்ற குழுவை உருவாக்கி நமது சனாதன தர்மத்தை காக்கும் விஷயங்களை செய்து வருகின்றனர். வேதபாரதி இதழானது 10-ம் ஆண்டில் அடி எடுத்து வைப்பதில் மிக்க மகிழ்ச்சி, பாரத தேசத்து குழந்தைகளை சிறப்பாக வளர்க்க பாடுபடும் வேதபாரதி செயலர் திரு. வெங்கட்ராமன் அவர்களுக்கும், குழுவினர்களுக்கும் நன்றிகள்.*

**ஸ்ரீ ஸ்ரீதர்,** *நிர்வாக அறங்காவலர்,*
APKT Trust, Chennai

---

## வாழ்த்துக்கள்



*பவித்ரமான சனாதன தர்மத்தை சாதாரணமானவர்களும் அறிந்து கொள்ள அளப்பறிய சேவை செய்து வரும் "வேதபாரதி செய்திகள்" இன்னும் பல்லாண்டு சேவையைத் தொடர அம்பாள் ஜகன் மாதா ஸ்ரீ ரேணுகாதேவியின் திருமலர்களைப் ப்ரார்த்திக்கும்.*

**ஸ்ரீ ரேணுகா தேவி கோயில் குடும்பத்தார்,**
*மாந்தோப்பு, தருமபுரி.*

# வாழ்த்துக்கள்

வேதம் நிறைந்த தமிழ்நாடு என்ற மஹாகவி பாரதியார் போற்றிப் புகழ்ந்த பெருமை கொண்டது நம் தமிழ்நாடு. நம் சனாதன தர்மத்திற்கு ஆணிவேராக விளங்குவது வேதமே என்பதில் சிறிதும் ஐயப்பாடில்லை. அந்த வேத தர்மத்தைக் காப்பதிலும் பரப்புவதிலும் நம் வேதபாரதி இணையற்றசேவை செய்து வருவது நாம் அறிந்ததே. இந்த அமைப்பின் சில செயல்பாடுகள் குழந்தைகளுக்கு ஆன்லைன் மூலம் ஸ்லோக வகுப்புகள், நம் தர்மத்தின் முக்கிய அங்கமாக விளங்கும் சந்தியாவந்தன பயிலரங்கம், பெண்மையைப் போற்றுவோம் நிகழ்ச்சிகள் மற்றும் வேதவகுப்புகள், யோகா வகுப்புகள் அவற்றுள் தலையானவை. அவை எவ்வாறு செயல்படுத்தப்படுகின்றன என்பதை அனைத்து மக்களுக்கும் சென்று அறிவிக்கும் தூதனாக விளங்குவது "வேத பாரதி செய்திகள்" என்ற மாத இதழாகும். இந்த மாத இதழ் தனது ஒன்பதாவது ஆண்டு கால பயணத்தினை இனிதே நிறைவு செய்து பத்தாம் ஆண்டில் வெற்றிகரமாக அடியெடுத்து வைப்பது மிகவும் போற்றுதற்குரியது. இதற்கு இடையறாது பாடுபட்டுவரும் பெரியோர்கள் ஸ்ரீ சூரியநாராயணன் மற்றும் வெங்கட்ராமன் ஜி அவர்கள், ரகுநாத் ஜி அவர்கள் மற்றும் சென்னை மட்டுமல்லாது நம் தேசத்தின் அனைத்துப் பகுதிகளில் இருந்தும் அவர்களோடு தோளோடு தோள் சேர்ந்து பணியாற்றும் அனைவருக்கும் நெல்லை வாழ் மக்கள் தங்கள் சிரம் தாழ்ந்த வணக்கங்களைத் தெரிவிப்பதோடு இந்த இதழ் மேலும் பல்லாண்டு கண்டு சமுதாய பணியாற்ற எல்லாம் வல்ல இறைவனையும் வேதபாரதி அமைப்பிற்கு வழிகாட்டும் பூஜ்ய ஸ்ரீ பரமானந்த பாரதி ஸ்வாமிகள் மற்றும் காஞ்சி ஸ்ருங்கேரி ஆச்சார்யர்களின் திருப்பாதம் பணிந்து வேண்டுகிறோம்.

**ஸ்ரீ வெங்கட்ராமன்,** திருநெல்வேலி.

## வேதபாரதி ஊரப்பாக்கம் - வாழ்த்துரை

பூஜ்ய ஸ்ரீ பரமானந்த பாரதி ஸ்வாமியின் அனுக்கிரகத்தினாலும் வேதபாரதி மாத இதழில் தொடர்ந்து கட்டுரைகள் எழுதி வரும் நமது புத்தக ஆசிரியர்கள் மற்றும் கட்டுரையாளர்கள் இப்புத்தகத்தின் மீது கொண்டுள்ள அதிகப்படியான அக்கறையினாலும் ஒரு சில பக்கங்களுக்கான செலவுகளையும் ஒரு சிலர் ஏற்றுக்கொண்டு இந்த வேதபாரதி மாதாந்திர பத்திரிக்கையானது சிறந்த பொலிவுடன் ஒவ்வொரு மாதமும் சரியான நேரத்தில் வெளிவருவதற்கு உற்றதுணையாக இருந்து பணி ஆற்றி வரும் அனைவரும் க்ஷேமமாக வாழ பகவானை பிரார்த்தனை செய்து கொண்டு வரும் பத்தாவது ஆண்டில் அடி எடுத்து வைக்கும் வேதபாரதியின் மாத இதழானது மேலும் வளர்ச்சி அடைந்து அதிக பக்கங்களுடன் அற்புதமாக வெளிவர வேண்டும் என்று பிரார்த்தனையோடு ஊரப்பாக்கம் மற்றும் கூடுவாஞ்சேரி பகுதி வேதபாரதி அமைப்பின் சார்பாக வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறோம்.

### வேதபாரதியை வாழ்த்துகிறோம்

தேசமும் தெய்வமும் கண்களாக பாவித்து தொண்டு செய்துவரும் வேதபாரதி குழுவினரை பாராட்டுகிறோம்

**R. நடராஜன்**
ராம்நாத் ஏஜென்சீஸ்,
திருப்பூர்

# ஸ்ரீசுந்தரர் விஜயம்

கடந்த பல வருடங்களாக “வேதபாரதி” என்றஅமைப்பு பல நல்ல காரியங்களை மிகச் சிறப்பாக பலபேர்களுடைய கூட்டு முயற்சியுடன் செய்து வருகின்றது. இந்த அமைப்பு 10 ஆண்டுகளுக்கு முன்பு “ஸ்ரீ சுந்தரவிஜயம்” மாத இதழில் வேதபாரதி பற்றி நல்ல கருத்துக்களை 6 பக்கத்திற்கு வெளியிட்டு வந்தது. “வேதபாரதியின்” வளர்ச்சி மிகச் சிறப்பாக வளர்ந்து, பரவி வந்த காரணத்தினால் தங்களுக்கு என்று தனிமாத இதழ் தொடங்குவது என்று முடிவு செய்யப்பட்டது. “வேதபாரதி செய்திகள்” என்றபெயரில் மாத இதழ் அரசாங்கத்தில் பதிவு பெற்று தொடங்கப்பட்டது. இந்த இதழ் பல நல்ல உள்ளங்களின் உழைப்பாலும், பண உதவியாலும் கடந்த 9 வருடங்களாக சிறப்பாக நடத்தப்பட்டது. இந்தப் பத்திரிக்கை மேலும் சிறப்பாக செயல்பட வேண்டும் என்று “ஸ்ரீ சுந்தரர் விஜயம்” மாத இதழ் வாழ்த்துகின்றது.

**T. கணேசன்,** ஆசிரியர் | **ஸ்ரீ சீதாராமன்,** பொறுப்பு ஆசிரியர் | **ஸ்ரீ மணிசங்கர்,** மேலாளர்

## வாழ்த்துக்கள்

வேதபாரதி தன் பத்தாம் ஆண்டில் கால் எடுத்து வைப்பது அறிந்து மகிழ்கிறேன். பரபரப்பான அரசியலும், பொருள் தேடும் ஆசையும் “நவீன” வாழ்க்கை முறையும் மக்களை திசை திருப்பும் இந்த காலத்தில் நம் சிறப்பான வேதபாரம்பரியத்தை நினைவுபடுத்தும் வகையில் வேதபாரதி திகழ்கிறது. வேதவாழ்வு பக்கம் திரும்ப நினைக்கும் அன்பர்களுக்கு இது உறுதுணையாக நிற்கிறது.

ஸ்வாமிகளின் ஆசிகளுடம் வேதபாரதி மேன்மேலும் வளர்ந்து தேச சேவை ஆற்றவாழ்த்துகிறேன். வேதபாரதி செவ்வனே தன் பணி ஆற்ற தமது பங்கை அளிக்கும் அனைவரும் நலம் பெறுக.

**டாக்டர் தி.வாசுதேவன் அக்னிஹோத்ரி**

கடலூர் - 1

# உங்கள் சிந்தனைக்கு

## 1. நண்பனும் - பகைவனும்

வாழ்க்கையில் நாம் எதை கொடுக்கின்றோமோ, எதை இழக்கின்றோமோ அதைத்தான் திரும்பப் பெறுகிறோம். நமக்கு அன்பு வேண்டுமென்றால் நாம் மற்றவர்களிடம் அன்பாக பழகவேண்டும். நமக்கு சந்தோஷம் வேண்டுமென்றால் நாம் மற்றவர்களை சந்தோஷப்படுத்தவேண்டும். நமக்கு சுகம் வேண்டுமென்றால் நாம் மற்றவர்களுக்கு சுகம் கொடுக்க வேண்டும். முதலில் நம்மை நாமே மாற்றிக் கொண்டால்தான் சமுதாயத்தை மாற்றமுடியும்.

ஒரு ஊரில் ஒரு ராஜா இருந்தார். அவருக்கு மிக புத்தியுள்ள ஒரு கிளி கிடைத்தது. அதற்கு சில மொழிகளும் தெரியும். அதன்மீது அவர் கொண்ட அன்பால் அந்த கிளி ராஜாவின் மனதை நன்கு அறிந்திருந்தது. அந்த ராஜா எங்கு போனாலும் அந்த கிளியும் அவருடன் போகும். ஒரு நாள் ராஜா காட்டிற்குப் போனார். கிளியும் உடன் சென்றது. ராஜாவிற்கு மிகுந்த தாகமாக இருந்ததால் ஒரு மரத்திலிருந்து ஒரு இலையை பறித்து ஒரு குவளைபோல் ஆக்கி அங்கிருந்த தடாகத்திலிருந்து தண்ணீரை எடுத்து குடிக்க முயன்றார். அப்போது அந்த கிளி அதை தன் அலகால் தட்டிவிட்டது. அடுத்தடுத்து ராஜா இதே போல் தண்ணீர் குடிக்க எத்தனிக்கும் போதெல்லாம் அந்த கிளி அதை தட்டிவிட்டது. தண்ணீர் தாகத்தால் பொறுமை இழந்த ராஜா கோபத்தில் தன் வாளால் அந்த கிளியை வெட்டி கொன்றுவிட்டார். அதன் பிறகு ராஜா அந்த தடாகத்திலிருந்து தண்ணீரை எடுக்க ஆரம்பித்தபோது அவர் கண்டது அவரை அதிர்ச்சி அடைய வைத்தது.

காரணம் அந்த தண்ணீரில் ஒரு கொடிய விஷப்பாம்பு செத்துக்கிடந்தது. அந்த பாம்பின் விஷம் அந்த தண்ணீரில் கலந்திருந்தது. இதை அந்த புத்திசாலி கிளி கவனித்ததால்தான் ராஜா தண்ணீர் குடிக்க முயற்சித்த போது அதை தட்டிவிட்டது. அந்த கிளி ராஜாவிற்கு நல்லதையே செய்தது. ஆனால் அதை அறிந்துகொள்ள அந்த ராஜாவால் முடியவில்லை.

எந்த ஒரு செயலை செய்யும் முன்பு ஒன்றுக்கு பலமுறையோசிக்க வேண்டும். நமக்கு விவேக புத்தி வேண்டும். நமக்கு திடமான புத்தி இருக்குமானால் நம்முடைய வாழ்க்கை வெற்றியாக அமையும். நமக்கு நாமே நண்பன், நமக்கு நாமே பகைவன். இதைத்தான் பகவான் கீதையில் அழகாகக் கூறுகிறார்.

**உத்தரேதாத்மனாத்மானம் நாத்மானமவஸாதயேத்/**

**ஆத்மைவ ஹ்யாத்மனோ பந்து ஆத்மைவ ரிபுராத்மன//**

**(கீதை 6-5)**

**பொருள் :** தானே தன்னை உயர்த்திக்கொள்ள வேண்டும் தன்னைத் தானே வீழ்த்திக்கொள்ளக் கூடாது. ஏனெனில் தனக்குத் தானே நண்பன், தனக்குத்தானே பகைவன்.

யாரையும் விரோதிகளாக பாவிக்காதீர்கள்.


தொகுப்பு : **D. சூரியநாராயணன்**


99940 89133



99940 89140

**SRI SASTHA CATERING**



*We are Supplying Meals,*
*Tiffin & Marriage Sear*
*Variation in Order*



**28, Senthuran Colony, 2nd Street, Muvarasempet, Madipakkam, Chennai - 91**

## சோபக்ருது வருஷம் - ஐப்பசி மாத விசேஷங்கள்
**(அக்டோபர் 18.10.2023 முதல் நவம்பர் 16.11.2023 வரை)**

| | | | |
|---|---|---|---|
| *18.10.2023* | *ஐப் 1* | புதன் | அனுஷம், சதுர்த்தி, துலா ஸ்நானம் |
| *20.10.2023* | *ஐப் 3* | வெள்ளி | சஷ்டி |
| *23.10.2023* | *ஐப் 6* | திங்கள் | ஸரஸ்வதி பூஜை, ஆயுத பூஜை |
| *24.10.2023* | *ஐப் 7* | செவ்வாய் | விஜயதசமி |
| *25.10.2023* | *ஐப் 8* | புதன் | ஏகாதசி |
| *26.10.2023* | *ஐப் 9* | வியாழன் | ப்ரதோஷம் |
| *28.10.2023* | *ஐப் 11* | சனி | பௌர்ணமி, மஹா அன்னாபிஷேகம் |
| *30.10.2023* | *ஐப் 13* | திங்கள் | க்ருத்திகை |
| *01.11.2023* | *ஐப் 15* | புதன் | சங்கடஹர சதுர்த்தி |
| *03.11.2023* | *ஐப் 17* | வெள்ளி | சஷ்டி |
| *08.11.2023* | *ஐப் 22* | புதன் | ஏகாதசி |
| *10.11.2023* | *ஐப் 24* | வெள்ளி | ப்ரதோஷம் |
| *12.11.2023* | *ஐப் 26* | ஞாயிறு | தீபாவளி பண்டிகை |
| *13.11.2023* | *ஐப் 27* | திங்கள் | அமாவாஸ்யை |
| *14.11.2023* | *ஐப் 28* | செவ்வாய் | அனுஷம் |
| *16.11.2023* | *ஐப் 30* | வியாழன் | கடைமுகஸ்நானம் |

### 13.11.2023 திங்கட்கிழமை - அமாவாஸை

சோபக்ருது நாம ஸம்வத்ஸரே, தக்ஷிணாயனே சரத் ருதௌ, துலாமாஸே, க்ருஷ்ணபக்ஷே, அமாவாஸ்யாயாம் புண்யதிதௌ வாஸர: வாஸரஸ்து இந்து வாஸர யுக்தாயாம் விசாகா நக்ஷத்ர யுக்தாயாம், விஷ்ணு யோக விஷ்ணுகரண, ஏவம்குண ஸகல விசேஷண விஸிஷ்டாயாம், அஸ்யாம், அமாவாஸ்யாயாம் புண்யதிதௌ.

Owned, Published and Printed by **R. VENKATARAMAN,** Printed at **SABANAYAGAM PRINTERS,** 39,Millers Road, Kilpauk, Chennai - 600010 and Published at 27, F1, Annai Indira Nagar, Velachery, Chennai - 600042. Editor : **R. VENKATARAMAN, 9443495950**

## அட்டைப்பட விளக்கம்

## வேதபாரதி செய்திகள் 10 ஆம் ஆண்டு துவக்கம்

எல்லாம் வல்ல ஸ்ரீ பரமேஸ்வரரின் க்ருபையாலும், ஸ்ரீ மஹா பெரியவா மற்றும் வேதபாரதியின் ஆசான் பூஜ்யஸ்ரீ பரமானந்த பாரதி ஸ்வாமிகள் ஆகிய மஹான்களின் அனுக்கிரஹத்தாலும், மஹா மகோபாத்யாய முல்லைவாசல் பிரம்மஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள், வேதபாரதியின் ஸ்தாபகர் திருப்பூர் ஆடிட்டர் ஸ்ரீ T.R.ராமநாதன் ஜி ஆகியோரின் வழிகாட்டுதல்படியும் **“வேதபாரதி செய்திகள்”** பத்திரிகை 9 ஆண்டுகளைக் கடந்து இந்த மாதம் (அக்டோபர் 2023) 10ஆவது ஆண்டில் நுழைந்து வெற்றி நடைபோடுகிறது.

**“வேதபாரதி செய்திகள்”** ஒன்பது ஆண்டுகளை எந்தவித தடங்கலும் இல்லாமல் வெற்றிகரமாகக் கடந்து வந்துள்ளது என்றால் அதற்கு முக்கிய காரணம் **“வேதபாரதி”** அமைப்பின் செயலாளரும், புத்தகத்தின் ஆசிரியருமான ஸ்ரீ வெங்கட்ராமன்ஜி அவர்களின் அயராத, அபரிமிதமான உழைப்புதான். பத்திரிகையின் இந்த வெற்றிக்கு மற்றுமொரு காரணம் தொடர்ந்து பேராதரவு அளித்துவரும் விளம்பரதாரர்களும் அன்பு வாசகர்களுமே.

**பத்திரிகையின் வளர்ச்சி :**

**“வேதபாரதி”** = பாரதப் பண்பாட்டு அமைப்பு பல ஆண்டுகளாக ஆண், பெண் குழந்தைகளுக்கும், கிரஹஸ்தர்களுக்கும் ஏராளமான நிகழ்ச்சிகளை நடத்திவருகிறது. அப்படி நடத்தும் நிகழ்ச்சிகளின் விவரங்களையும் ஆன்மீக விஷயங்களையும் மக்களிடம் எடுத்து செல்வதற்காக ஒரு பத்திரிகை ஆரம்பிக்க வேண்டும் என்ற ஓர் எண்ணம் 2014-ல் தோன்றியது.

திடீரென்று ஒரு பத்திரிகை ஆரம்பிப்பது என்பது

அவ்வளவு சுலபமில்லை அதற்கு ஏராளமான சட்ட திட்டங்கள் இருக்கின்றன. ஆகையால் 2014 ஆகஸ்ட் முதல் 2015 செப்டம்பர் வரையிலும் **"சுந்தர விஜயம்"** என்னும் பத்திரிகையில் 6 பக்கங்களில் வேதபாரதி செய்திகள் வெளியிடப்பட்டது. 2015 அக்டோபர், நவம்பர், டிசம்பர் ஆகிய மூன்று மாதங்களுக்கு **"வேதபாரதி"** என்ற பெயரில் 6 பக்கத்தில் ஒரு சிறிய புத்தகமாக அச்சடித்து வாசகர்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டது.

2016 ஜனவரி முதல் செப்டம்பர் வரையிலும் (9 மாதங்கள்) 16 பக்கங்கள் கொண்ட புத்தகமாக வாசகர்களுக்கு வழங்கப்பட்டது. பத்திரிகைக்கு நல்ல வரவேற்பு கிடைத்தது.

அதன்பிறகு, வேதபாரதிக்கு மிகவும் உதவிவரும் **"பசுத்தாய்"** மாத இதழின் ஆசிரியர் ஸ்ரீ பசுத்தாய் கணேசன் அவர்களின் உதவியோடு அரசின் அனுமதிகளைப்பெற்று புத்தகத்திற்கு **"வேதபாரதி செய்திகள்"** என்று பெயர் சூட்டி புத்தகத்தின் தனிப் பிரதி ரூ.10/- என்றும், வருட சந்தா ரூ.100/- என்றும், ஆயுள் சந்தா ரூ.1500/- என்றும் நிர்ணயம் செய்து 2016 அக்டோபர் மாதம் முதல் 20 பக்கங்கள் கொண்ட மாத பத்திரிகையாக வெளிவரத்துவங்கியது. அதன்பிறகு பக்கங்கள் 48 ஆக அதிகரித்தது.

**"வேதபாரதி செய்திகள்" எழுத்தாளர்கள்:**

மஹா பெரியவா **"தெய்வத்தின் குரலில்"** எழுத்தாளர்களைப் பற்றி கூறும்போது "எழுத்தாளர்கள் ஜனங்களுக்கு பிடித்ததை மட்டுமே சொல்வது என்று வைத்துக்கொள்ளக் கூடாது. அவர்களின் அறிவை, மனதை உயர்த்துகிற விஷயங்களையே எழுதவேண்டும். இதை சுவாரசியமாகச் செய்ய வேண்டும். உத்தமமான விஷயங்களைப் புதுப்புது விதங்களில் உணர்த்தவேண்டும்" என்று கூறியுள்ளார்.

**“வேதபாரதி செய்திகள்”** பெற்றுள்ள எழுத்தாளர்களும் இப்படிப்பட்ட எழுத்தாளர்களே.

**1. ஸ்ரீக்ருஷ்ண ஜகந்நாதன்ஜி :** வேதபாரதியின் தந்தை இவர் “அறிவோம் வேதம்” என்ற தலைப்பில் மாதா மாதம் முக்கியமான வேத மந்திரங்களையும், அவற்றின் பொருளையும் அளித்துவருகிறார்.

**2. டாக்டர்.ஷ்யாமா ஸ்வாமிநாதன் :** சிறந்த சமூக சேவகி, சிறந்த எழுத்தாளர் என பன்முக ஆற்றல் கொண்டவர். “வேதபாரதி” அமைப்பின் ஆரம்பத்திலிருந்து உடன் இருந்து ஒரு தூண்போல் விளங்குபவர். இவர் பல வருடங்களாக தேச விடுதலைக்காக போராடிய பெண்கள் குறித்து **“சாதனைப் பறவைகள்”** என்ற தலைப்பில் தொடர் கட்டுரை எழுதினார். இன்றும் பல தலைப்புகளில் கட்டுரைகளை எழுதிவருகிறார்.

**3. திருமதி.காந்தலக்ஷ்மி சந்திரமௌலி :** பத்திரிகையாளர், சிறந்த எழுத்தாளர். குழந்தை உள்ளம் கொண்டவர். வேதபாரதி அமைப்பு ஆரம்பத்திலிருந்து பெண்களுக்காக நடத்தும் **“யுவஸ்ரீ வாழ்வியல் பயிலரங்கம்”** என்ற நிகழ்ச்சிக்கு இவருடைய இல்லத்தில்தான் வித்திடப்பட்டது. 2014 ம் ஆண்டு புத்தகம் ஆரம்பித்த முதல் இதழிலிருந்து இன்று வரையிலும் குழந்தைகள் வளர்ப்பு குறித்து **“பெற்றோர்களே கவனியுங்கள்”** என்ற தலைப்பில் தொடர் கட்டுரை எழுதுவருகிறார். ஒரு மாதம்கூட தவறியதில்லை. இவருடைய இந்த தொடர் கட்டுரை வேதபாரதி இதழிற்கு மகுடம் சூட்டியதுபோல் அமைந்துள்ளது. இதன் முதல் இரண்டு பகுதிகளையும் தனி புத்தகமாக “வேதபாரதி” வெளியிட்டுள்ளது. தற்போது மூன்றாம் பாகம் வந்துகொண்டிருக்கிறது. இதற்கு வாசகர்களிடம் குறிப்பாக தாய்மார்களிடம் நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது.

**3. திருமதி.காந்தாமணி நாராயணன் :** இவரும் வேதபாரதி அமைப்பின் நிகழ்ச்சிகளுக்கு துணையாக இருப்பவர். இவர் தற்போது இராமாயணத்தை "இராமாயணம் தரும் படிப்பினை" என்ற தலைப்பில் கட்டுரை எழுதிவருகிறார்.

**4. திரு. நடராஜன் (ஆதிரையன்) பாண்டிச்சேரி :** இவர் "பசு", "புரோஹிதர்" "தருவின் நிழலில்" என்ற தலைப்புகளில் புதுமையான கட்டுரைகளை எழுதிவருகிறார். இவருடைய கட்டுரையின் கருத்துக்கள் பலரும் அறியாதது. ஆனால் எல்லோரும் அறிந்துகொள்ள வேண்டியவை.

**5. திரு.மீ. சீனிவாசன், பரமக்குடி :** இவரும் சிறந்த எழுத்தாளர். பல ஆன்மீக கட்டுரைகளையும், பிரசித்திபெற்ற கோயில்கள் பற்றியும் கட்டுரைகள் எழுதிவருகிறார்.

**6. திருமதி. சிவசங்கரி :** இளம் எழுத்தாளர், நல்ல சமூக கருத்துக்களை சிறு சிறு கதைகள் மூலம் எழுதிவருகிறார்.

**7. சூரியநாராயணன் (அடியேன்) :** 2014 ஆம் வருடம் புத்தகம் ஆரம்பித்தது முதல் திரு.வெங்கட்ராமன்ஜி அவர்களுக்கு துணையாக இருக்கிறேன். என்னை எழுதும்படி ஊக்குவித்தது திரு.வெங்கட்ராமன்ஜி அவர்கள்தான். 2014 முதல் ஸ்ரீ ஆதி சங்கர பகவத் பாதர் அவர்களின் வாழ்க்கை வரலாறு, ஸ்ரீமத் பகவத் கீதை, ஸ்ரீமத் பாகவதம், ஔவையாரின் படைப்புக்கள் ஆகியவற்றை பல சான்றோர்களின் நூல்களின் ஆதாரங்களோடு எழுதிவருகிறேன்.

இன்னும் பல எழுத்தாளர்களும் தங்கள் படைப்புக்களை புத்தகத்திற்கு அளித்து வருகிறார்கள். அவர்களின் படைப்புக்களும் வாசகர்களிடம் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளன.

புத்தகத்தை மேலும் பொலிவூட்டுவது சிருங்கேரி ஜகத்குரு ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த மஹா ஸ்வாமிகள் அருளிய நல் கருத்துக்கள், ஸ்ரீ மஹாபெரியவாளின் அற்புத விளக்கங்கள் மற்றும் பூஜ்யஸ்ரீ பரமானந்த பாரதி ஸ்வாமிகளின் **“தர்மத்தின் குரல்”** புத்தகத்திலிருந்து சிறு பகுதிகள்

அரசாங்க ஆணைப்படி ஒவ்வொரு மாதமும் 7ம் தேதிக்குள் புத்தகம் வெளியாக பேருதவியாக இருப்பவர்கள்.

1. ரெம்ஸ் டிஜிட்டல் பிரஸ், வேளச்சேரி : புத்தகத்தின் எல்லா கட்டுரைகளையும் மற்ற விவரங்களையும் மிகவும் நேர்த்தியாக புத்தகவடிவில் தட்டச்சு செய்து கொடுப்பவர்.

2. சபாநாயகம் பிரிண்டர்ஸ், சென்னை : புத்தகத்தை அழகாக அச்சடித்து புத்தகவடிவமாக்கி குறித்த நேரத்தில் அளிப்பவர்.

3. புத்தகம் வந்ததும் எல்லா புத்தகத்திலும் வாசகர்களின் விலாசங்களை ஒட்டி, தபால் நிலையத்திற்கு அனுப்பும் பணியை ஆர்வத்துடன் தானாக முன்வந்து செய்யும் புத்தகக் குழு உறுப்பினர்கள் = திருவாளர்கள் வேளச்சேரி ராமன், வைத்தியநாதன், ரகுநாதன், ஸ்வாமிநாதன், பத்மநாபன் மற்றும் திருமதி.அன்னபூரணி, திருமதி.காமாக்ஷி மேலும் பலர்.

எல்லாவற்றிற்கும் மேலாக புத்தகத்தின் வெற்றிக்கு முக்கிய காரணமாக இருப்பவர்கள் தொடர்ந்து ஆதரவளித்துவரும் விளம்பரதாரர்களும் அன்பான வாசகர்களுமே.

**“வேதபாரதி செய்திகள்”** பத்திரிகை மேலும் மேலும் வெற்றிநடைபோட எல்லாம் வல்ல ஸ்ரீபகவானை ப்ரார்த்திக்கிறேன்.

தொகுப்பு : **D. சூரியநாராயணன்**

ஓம் நமோ பகவதே வாஸுதேவாய,
ஓம் நமோ நாராயணாய.

# ஸ்ரீமத் பகவத்கீதை

D. சூரியநாராயணன் பகுதி - 54

## அத்தியாயம் – 3

## கர்ம யோகம்

ஞானமும்; கர்மமும் எப்படி ஒன்றோடு ஒன்று சம்பந்தப்பட்டவை என்பதற்கு விடை

**ந கர்மணாமனாரம்பா4ந் நைஷ்கர்ம்யம் புருஷோஸ்னுதே/**
**ந ச ஸந்யஸனாதே3வ ஸித்3தி4ம் ஸமதி4க3ச்சதி// (கீதை 3-4)**

**பொருள் :** மனிதன் கர்மங்களை அனுஷ்டிக் காமையினால் கர்மாதீதத்தை அடைவதில்லை. வெறும் சன்யாசத்தால் நிறை நிலையைப் பெறுவதுமில்லை.

பகவான் அர்ஜுனனிடம் "அர்ஜுனா நீ யுத்தம் செய்யாமல் இருந்துவிட்டால் அந்த நைஷ்கர்ம சித்தி அடையமாட்டாய்" என்கிறார். நாம் தியானம் செய்வதற்கு உட்கார்ந்தால் அவ்வளவு சுலபத்தில் நம்முடைய மனதை அமைதிக்குக் கொண்டுபோக முடியாது. காரணம் நம்முடைய மனது எப்போதும் எதையாவது சிந்தித்துக்கொண்டே இருக்கும். காரணம் கடந்த காலத்தில் நடந்தது எல்லாம் நம்முடைய மனதில் அடைந்து கிடக்கிறது. நாம் கண்களை மூடினால் அவை ஒன்றன் பின் ஒன்றாக வந்துக்கொண்டே இருக்கும். வயதானவர்களுக்குக்கூட மனதை அமைதிக்குக் கொண்டுபோக முடியாது. நம்முடைய மனதில் அடைந்து கிடைக்கும் வேண்டாத சிந்தனைகளை காலி செய்யாவிட்டால் நம்மால் தியானத்தில் அமைதிக்குப் போக முடியாது. இதைத்தான் பகவான் அர்ஜுனனிடம் கூறுகிறார். அதாவது கர்மா செய்யாமலிருந்தாலோ

அல்லது கர்மத்தை விட்டுவிட்டாலோ ஒருவன் உயர் நிலையை அடைவதில்லை.

அடுத்த ஸ்லோகம் மிக மிக முக்கியமானது. நாம் ஒவ்வொருவரும் மனப்பாடம் செய்ய வேண்டிய ஸ்லோகம். பகவான் நம்முடைய மனதை காட்டுகிறார்.

**ந ஹி கஸ்சித் க்ஷணமபி ஜாது திஷ்ட2த்யகர்மக்ருத்/**

**கார்யதே ஹ்யவச: கர்ம ஸர்வ : ப்ரக்ருதிஜைர்கு3ணை://**

**(கீதை 3-5)**

பொருள் : யாரும் ஒரு கணப்பொழுதேனும் செயலாற்றாமல் இருப்பதில்லை. ஏனென்றால் பிரகிருதியினின்று உதித்த குணங்களால் ஒவ்வொரு உயிரும் தன் வயமின்றிக் கர்மம் செய்விக்கப்படுகிறது.

விளக்கம் : இந்த பிரபஞ்சத்தில் யாராலும் சும்மா இருக்க முடியாது. கருமம் செய்யாமல் இருக்க முடியாது சோம்பேறிகளால் கூட சும்மா இருக்க முடியாது. ப்ரகிருதி ஒரு கர்ம சக்கரம். நாம் சும்மா இருக்கும் போது நம்முடைய மனதில் அழுக்கு அடைந்துவிடும். உலக நியதிப்படி நம் சரீரமும் சும்மா இருக்காது. ஒவ்வொரு நொடியும் நம் சரீரத்தில் கர்மங்கள் நடக்கின்றன. ஒரு செல் அழிகிறது. மற்றொரு செல் உற்பத்தியாகிறது.

நாம் மரணம் அடையும் வரை மூச்சு வந்து போய்க்கொண்டே இருக்கும். ரத்த ஓட்டமும் நிற்காமல் நடக்கிறது. நம் மனதை சும்மா இருக்கவிட்டால் அது நடந்து முடிந்தவற்றையோ அல்லது இனி வரவிருப்பதைப் பற்றியோ அநாவசியமாக சிந்திக்கும்.

முடிந்தவற்றை நினைவு கூர்ந்தால் குற்ற உணர்வும் மற்ற குறைகளும் நம்முடன் வரும். இனி வரவிருப்பதைப் பற்றி நினைத்தால் மனதுக்கு பயம்

*வரும். அதனால் பகவான் கூறுகிறார். "மனதை ஒரு நொடிக்கூட சும்மா இருக்க விடாதீர்கள்.*

*ஸ்ரீமத் பாகவதமும் இதே கருத்தை 6ஆவது ஸ்கந்தத்தில் 1ஆவது அத்தியாயத்தில் 53ஆவது ஸ்லோகத்தில் கூறுகிறது*

**ந ஹி கஸ்ஸித் க்ஷணமபி ஜாது திஷ்டத்யகர்மக்ருத்/**

**கார்யதே ஹ்யவஸ: கர்ம குணை: ஸ்வாபாவிகைர் பலாத்//**

**"கஸ்ஸித்"** *= ஒருவன்,* **"அகாமக்ருத்"** *= காரியம் செய்யாமல், "க்ஷணமபி" = ஒரு நிமிடங்கூட,* **"ஜாது"** *= எக்காலத்திலும்,* **"நஹி திஷ்டதி"** *= இருக்க முடியாது.*

*யாரும் ஒரு கணம் கூட செயலற்று இருக்க முடியாது.*

*சரி, மனிதன் எதுவும் செய்யாமல் மௌனியாக அமர்ந்திருந்தால் அது செயலைத் துறந்ததாக அமையாதா? என்றகேள்விக்கு அடுத்த ஸ்லோகத்தில் பகவான் பதில் அளிக்கிறார்.*

*கர்மயோகம் தொடரும்...*

ஹரி ஓம்
ஸ்ரீ குருப்யோ நம:

**வேதபாரதி**

**யோகா வகுப்புகள்** (30 நிமிடங்கள்)

**வாரம் 2 நாட்கள் by Online**

**செவ்வாய், வியாழன் – காலை 5.30 மணி**
**சனி, ஞாயிறு – காலை 6.00 மணி**

ஆசிரியர் : யோகாச்சாரியார் **ஸ்ரீ J. சந்திரசேகர் ஜி**
திருச்சி

**யோகாவில் இணைவோம் உடல் மனம் புத்துணர்ச்சி பெறுவோம்**
தொடர்புக்கு :

**9443495950 / 9443453053**

# ஸ்ரீமத் பாகவதம்

(ஸத்யம் பரம் தீமஹி)

பரிதி பகுதி - 33

## ஸ்கந்தம் 4

**“ஸ்ரீமத் பாகவதம்”** எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்னால் எழுதப்பட்டதானாலும் அது இன்றைய நம்முடைய வாழ்க்கையை மாற்றி அமைக்கக்கூடிய ஒரு **“கிரந்தம்”.** இது கேவலம் ஒரு கதையைக் கூறும் **“கிரந்தம்” அல்ல.**

ஸ்ரீமத் பாகவதத்தில் பகவானின் மஹிமைகளையும், பகவானின் நாம மஹிமைகளையும் பறைசாற்றும் விதமாக ஏராளமான அற்புத சரித்திரங்கள் உள்ளன. ஸ்ரீமத் பாகவதம் பன்னிரண்டு ரத்தினங்களால் கோர்க்கப்பட்ட மாலைபோல் பன்னிரண்டு ஸ்கந்தங்களைக் கொண்ட ஒரு மாலை. அதில் உயர்ந்த நீல நிறக் கல்போல் இருப்பது ஸ்ரீ கிருஷ்ண பகவானின் சரித்திரத்தைக் கூறும் கதைகள் (10வது ஸ்கந்தம்)

இதுவரையிலும் ஸ்ரீமத் பாகவதத்தின் முதல் மூன்று ஸ்கந்தங்களை விரிவாக பார்த்து விட்டோம்.

ஸ்ரீமத் பாகவதத்தில் நான்காவது ஸ்கந்தத்தில் மொத்தம் 31 அத்தியாயங்கள் உள்ளன. அந்த 31 அத்தியாயங்களில் மொத்தம் 1445 ஸ்லோகங்கள் உள்ளன.

இந்த “நான்காவது ஸ்கந்தத்தில் முதல் அத்தியாயத்தில் 66 ஸ்லோகங்கள் **“மனு”** வம்சத்தை விவரிக்கின்றன.

அத்தியாயம் 2 முதல் 7 வரையிலும் **“தக்ஷ யக்ஞம்”** விவரிக்கப்பட்டுள்ளது.

அத்தியாயம் 8 முதல் 13 வரையிலும் **“த்ருவ”**

*சரித்திரத்தை அழகாக விவரித்துள்ளார் ஸ்ரீ வியாஸ பகவான்.*

*அத்தியாயம் 14-ல் 46 ஸ்லோகங்கள்* **“வேனன்”** *விருத்தாந்தம் குறித்து விவரிக்கிறது.*

*அத்தியாயங்கள் 15 முதல் 23 வரையிலும்* **“ப்ருகு”** *மஹாராஜாவின் சரித்திரம் கூறப்பட்டுள்ளது.*

*அத்தியாங்கள் 24 முதல் 31 வரையிலும்* **“பிரஞ்சனோ பாக்யானம்”, “ப்ரசேதசர்களின் கதைகள்”** *ஆகியவை விவரிக்கப்பட்டுள்ளன.*

**ஸ்கந்தம் – 4, அத்தியாயம் – 1 = பிரஜாபதிகளின் வமிச விருத்தி**

*இந்த அத்தியாயம் உலகில் சிருஷ்டி, எப்படி நடந்தது என்பதை விளக்குகிறது.*

**“பிரம்மா”** *படைக்கும் தொழிலைச் செய்பவர். உலகத்தை விருத்தி செய்வதற்காக தன்னைப்போலவே சக்தி கொண்டவர்களாக நாரதர், ஆங்கிரஸ், புலகர், கிருது, தக்ஷர், வசிஷ்டர், மரீசி, அத்ரி, புலஸ்தியர், பிருகு என்று பத்து மகன்களை உண்டாக்கினார். ஆனால் அவர் எதிர்பார்த்ததுபோல் உலகம் விருத்தி அடையவில்லை. இதனால் மனம் வருந்திய பிரம்மா தன்னுடைய உடலையே இரண்டாக பிரித்து அதில் ஒன்றை ஆணாகவும், மறுபாதியை பெண்ணாகவும் ஆக்கினார். அவர்களுள் ஆணுக்கு* **“ஸ்வாயம்பு மனு”** *என்றும் பெண்ணிற்கு* **“சதரூபை”** *என்றும் பெயர் சூட்டினார். அவர்களின் மூலம் உலகில் சிருஷ்டி உண்டானது.*

*தொடரும்...*

**குழந்தைகளுக்கு, பெரியவர்களுக்கு**
**ஸ்லோக வகுப்புகள் ஆன்லைன் மூலமாக**
*ஆசிரியர் : ஸ்ரீ முரளிதரன்,*
*ஸ்ரீமதி நீலா முரளி, மதுரை*
*தொடர்புக்கு :* **9443489129**

அத்வைத ஆசான்

# ஸ்ரீ ஆதிசங்கரர்

**ஆதவன் அத்தியாயம் – 9 அவதார மஹிமை பாகம் 24**

## மனீஷா பஞ்சகம்

ஸ்ரீசங்கரர் காசியில் தனது சிஷ்யர்களுடன் தினமும் அனுஷ்டானங்களும், வேதாந்த விசாரமும் செய்து கொண்டிருந்தார்.

ஒரு நாள் ஸ்ரீசங்கரருக்கு ஒரு அசாதாரணமான சம்பவம் நிகழ்ந்தது. ஸ்ரீசங்கரர் கங்கையில் குளித்துவிட்டு தன்னுடைய சிஷ்யர்களுடன் விஸ்வநாதர் தரிசனத்திற்காக வந்துகொண்டிருந்தார். அந்த காலத்தில் காசியில் எல்லா தெருக்களுமே மிகவும் குறுகலாகத்தான் இருக்கும்.

அந்த தெருக்களில் பெரிய பெரிய மாடுகள் வேறு நின்றுகொண்டிருக்கும், அப்படிப்பட்ட ஒரு தெருவில் ஸ்ரீசங்கரரும் சிஷ்யர்களும் வந்துகொண்டிருந்தபோது அவர்களுக்கு எதிர் திசையில் ஆறடிக்கும் மேலான உயரமுள்ள ஆஜானுபாகுவான, அருவருப்பான தோற்றத்துடன் ஒரு சண்டாளன் (**ச்வபசன்** = நாய் மாம்ஸம் சாப்பிடுபவன்) தன் மனைவியுடனும், கயிற்றால் கட்டப்பட்ட நான்கு நாய்களுடனும் வந்து கொண்டிருந்தான். ஸ்ரீசங்கரர் அந்த சண்டாளனை ஊடுருவிபார்த்தார். அந்த நேரம் சிஷ்யர்களில் ஒருவன் அந்த சண்டாளனை நோக்கி **“மார்காத் அபஸர** = வழியிலிருந்து விலகு” என்று கூறினார்.

அப்போது அந்த சண்டாளன் அந்த சிஷ்யரை ஒரு பார்வை பார்த்துவிட்டு சங்கரரை நோக்கி பிராம்மணர்களில் சிறந்தவரே! என்று அழைத்துவிட்டு **“யார் விலகவேண்டும்”** என்ற கேட்டு மேலும் கேட்கிறான்.

**1. அன்னமயாத் அன்னமயம் அதவா சைதன்யமேவ சைதன்யாத்/**

**2. த்விஜவர தூரீகர்தும் வாஞ்சஸி கிம் ப்ரூஹி கச்ச கச்சேதி//**

**பொருள் :** *உணவினால் உருவான இந்த உடலிலிருந்து அதே உணவினால் ஆன உருவமான உங்கள் உடல் விலகவேண்டுமா? அல்லது என்னிடம் உள்ள சைதன்யத்திலிருந்து உங்களிடம் உள்ள சைதன்யம் விலகவேண்டுமா? உண்மையில் யார் விலகவேண்டும்?*

*ஸ்ரீ சங்கரர் மௌனமாக இருப்பதைக் கண்ட அந்த சண்டாளன் மேலும் கேட்கிறான்.*

**இரண்டாவது ஸ்லோகத்தின் பொருள் :** *(இந்த ஸ்லோகத்தில் வேதாந்த கருத்துக்கள் வருகின்றன)*

*கங்கை நீரிலும், புலையன் வசிக்கும் வீட்டின் அருகில் இருக்கும் சாக்கடை நீரிலும் ஆகாயத்தில் உள்ள சூரியனின் பிம்பம் ஒரே மாதிரிதான் பிரதிபலிக்கிறது. அதில் வேற்றுமை ஏதாவது உண்டா? பொன் குடத்திலும், என்னிடம் உள்ள இந்த மண் குடத்திலும் உள்ள வெளி (ஆகாசம்) ஒன்று தானே. இரண்டிற்கும் வேற்றுமை உண்டா?*

*இவ்வாறு உரக்கக் கூறி சங்கரரை நோக்கி சிரித்துக் கொண்டே அவர்களைக் கடந்து சென்றான்.*

*இதைக் கேட்ட ஸ்ரீசங்கரர் சில நிமிடங்கள் அசைவற்று நின்றார். அப்போது ஸநந்தனன் ஸ்ரீ சங்கரரை நமஸ்கரித்து "பகவானே இப்பொழுது வந்தது யார்? பரமேஸ்வரனோ? என்று கேட்டான். அதற்கு ஸ்ரீசங்கரர் பதில் ஏதும் கூறாமல் தன் குடிலுக்கு நடந்து சென்றார். மூன்று நாட்கள் யாரிடமும் பேசவில்லை. மூன்றாவது நாள் ஸநந்தனை அழைத்து தான்* **"பூர்ஜ"** *பத்திரத்தில் (Brich Tree Leaf) எழுதிய ஐந்து ஸ்லோகங்கள் ஸநந்தனிடம் கொடுத்து மூன்று நாட்களுக்கு முன் வந்தது பரமேஸ்வரனோ? என்று கேட்டாயே அதற்கான பதில்தான் இது" என்றார்.*

*தொடரும்.....*

## அறுபத்தி மூன்று (63) நாயன்மார்கள்

*அருணன்* *10/63*

### 10. அரிவாட்டாய நாயனார்

திருவாரூரில் இருந்து திருத்துறைப்பூண்டி செல்லும் வழியில் **"கண்மங்கலம்"** என்ற ஊர் நெல் வளம் மிக்க ஊர். அந்த ஊரில் வேளாண் குலத்தில் பிறந்த **"தாயனார்"** என்பவர் நல் ஒழுக்கமும், சிவபெருமானிடம் ஆழ்ந்த பக்தியும் கொண்டிருந்தார். தனக்கு கிடைக்கும் நல்ல பொருட்களை சிவனுக்கு காணிக்கையாக்க வேண்டும் என்ற ஆர்வம் உடையவராக இருந்தார்.

நாள்தோறும் கோயிலுக்குச் சென்று செந்நெல் அரிசியும், செங்கீரையும், மாவடுவும் இறைவனுக்கு நிவேதனம் செய்வதை விரதமாகக் கொண்டிருந்தார். என்ன தடை வந்தாலும் இதை மாத்திரம் விடாமல் செய்துவந்ததால் ஊரில் அவருக்கு நல்ல பெயர்.

இறைவன்மீது அன்பும், பக்தியும் உடையவர்களுக்கு சோதனைகள் பல நிகழும், தடைகள் பல வரும். இதைத்தான் வள்ளுவரும் குறிப்பிடுகிறார்.

**சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும் துன்பஞ்**
**சுடச்சுட நோற்கிற் பவர்க்கு. (குறள் 267)**

**பொருள் :** துன்பம் வரவர அதனால் தளர்ச்சி அடையாமல் தம் கொள்கையை பற்றி நின்று வெற்றி பெறுபவர்களே தவத்தில் சிறந்தவர்கள் ஆவார்கள்.

நாயனாருக்கு இறைவனின் சோதனை ஆரம்பமானது அவருடைய செல்வம் குறையத் துலங்கியது. அவருடைய தினசரி உணவிற்கே வழியின்றி திண்டாடினார். அப்போதும் அவர்

இறைவனுக்கு ஆற்றும் தொண்டை நிறுத்தவில்லை. கூலிக்கு நெல் அறுத்து கிடைக்கும் கூலி செந்நெல்லாக இருந்தால் அதை இறைவனுக்கு படைப்பார். கார் நெல்லாக இருந்தால் தனக்கு உணவாக்கிக்கொள்வார்.

இறைவன் மேலும் சோதனையைக் கடுமையாக்கினார். ஊர் முழுவதும் நாயனாருக்கு கூலியாக செந்நெல்லே கிடைத்தது. அவற்றை எல்லாம் இறைவனுக்கு படைத்துவிட்டு தான் தண்ணீரை மட்டும் குடித்து உயிர் வாழ்ந்தார்.

இந்த நிலையில் ஒரு நாள் இறைவனுக்கு அமுதூட்ட ஒரு கூடையில் செந்நெல் அரிசியும், கீரையும், மாவடுவும் எடுத்துக்கொண்டு சிவபிரான் கோயிலை நோக்கிச் சென்றார். அவருடன் அவருடைய மனைவியும் சென்றார். அப்படி போகும்போது பசியால் நாயனார் மிகவும் களைப்பாக இருந்தார். ஒரு இடத்தில் நில வெடிப்பில் அவருடைய கால் இடறி கீழே விழுந்துவிட்டார். கூடையில் இருந்த எல்லா பொருட்களும் மண்ணில் விழுந்துவிட்டன.

மிகவும் மனம் வருந்திய நாயனார் "ஐயோ இறைவனைப் பட்டினி போட்ட நான் பெரும் பாவியானேன். இனி கோயிலுக்குப் போய் என்ன செய்வது?. இந்த பிறவி இருந்தென்ன போய் என்ன?" இனி வாழ்வதில் பயன் இல்லை" என்று கூறி தன் அரிவாளால் தன் கழுத்தை அரிந்து கொள்ள தொடங்கினார். உடனே அந்த நில பிளப்பிலிருந்து ஒரு திருக்கரம் தோன்றி நாயனார் கரத்தை வாளோடு பற்றி நிறுத்தி நாயனாரை ஆட்கொண்டார் இறைவன்.

அரிவாளினால் தன் கழுத்தை அரிந்துகொள்ள முயன்றதால் **"நாயனார்"** அவர்களுக்கு **"அரிவாட்டாய நாயனார்"** என்ற பெயர் உண்டாயிற்று.

கொண்ட கொள்கையில் பிறழாமல் நின்று, அது பிறழும்போது உயிரைவிடத் துணிந்தது பெரும் வீரம். இத்தகைய வீரமே நாயன்மார்களிடம் உள்ள சிறப்பு.



நாயன்மார்கள் கதை தொடரும்......


## வேதபாரதி குரோம்பேட்டை

**பிரதி மாதம் ஸ்ரீ மஹா ஸ்வாமிகள் அனுஷபூஜை,**

வேத வகுப்புகள், குழந்தைகளுக்கு நன்னெறி வகுப்புகள் நடத்திட, யுவஸ்ரீ வகுப்புகள், பாரத கலாச்சார விழிப்புணர்வு வகுப்புகள் நடத்திட, ஸ்லோகங்கள் ஸகஸ்ரநாம பாராயணம் முழுமையாக தெரிந்துகொள்ள தொடர்பு கொள்ள வேண்டுகிறோம்.

தொடர்புக்கு :

**ஸ்ரீ வெங்கடேசன் - 8668139560**

**ஸ்ரீ வெங்கட்ராமன் - 9962837424**

**ஸ்ரீமான் ராம்குமார் சாஸ்திரிகள் - 9940430267**

**ஸ்ரீமதி ராஜலட்சுமி - 7092199447**

## ஔவையார்

# "மூதுரை"

*"**மூதுரை**" = முதுமை + உரை = மூதுரை பழமையான அறக்கருத்துக்களைக் கொண்டிருப்பதால் "**மூதுரை**" என அழைக்கப்படுகிறது. இந்நூலில் மொத்தம் 30 வெண்பாப் பாடல்கள் அமைந்துள்ளன.*

## வெண்பா 13

**கவையாகிக் கொம்பாகிக் காட்டகத்தே நிற்கும்**
**அவையல்ல நல்ல மரங்கள் – சபை நடுவே**
**நீட்டோலை வாசியா நின்றான் குறிப்பறிய**
**மாட்டாதவன் நன் மரம்.**

**பொருளுரை :** *கிளைகளை உடையனவாகவும், கிளையின் கொம்புகளை உடையனவாகவும் காட்டில் நிற்கும் மரங்கள் நல்ல மரங்கள் அல்ல. கற்றோர் சபையின் நடுவே, கற்றஒருவர் கொடுக்கும் ஓலையைப் படிக்க மாட்டாமல் நிற்பவனும், பிறர் குறிப்பை அறிய மாட்டாதவனுமே நல்ல மரம்.*


**விளக்கம் :** *ஔவை பாட்டி எழுதப் படிக்கத் தெரியாதவரை மரம் போன்றவன் என்று கேலியும், கிண்டலும், பரிவும், இரக்கமும் கலந்து கூறுகிறார்.* **"பர்த்ருஹரி"** *படிக்காதவனை* **"வித்யாவிஹீந:பசு:'**= *மிருகத்துக்கு சமமானவன் என்கிறார்.*

தொகுப்பு : **பரிதி**

*இந்தப் பகுதி தொடர்ந்து வெளிவர ஆதரவு தருபவர்*

**ப்ரம்மஶ்ரீ முனீஸ்வர சாஸ்திரிகள்,**

வேளச்சேரி


Freeztech Innovations
FREEZTECH INNOVATIONS
Carbon Capturing Technology
Makers of Co2
Production Plant and
Dry Ice Machineries
BLOCK MACHINE
PELLTIZER MACHINE
BLASTING MACHINE
No. 3-E, Chokkanpudur Road, Coimbatore,
Tamil Nadu, India - 641 001.
Contact : +91 70107 49496 | 96777 30846
E-mail : sales@freeztek.com | rama30846@gmail.com
Web : www.freeztek.com | www.venkateswaragas.in

# MAHALAKSHMI MARRIAGE CATERING SERVICES

(A to Z Marriage Catering)

- ❀ Reception
- ❀ Betrothal Function
- ❀ Grahapravesam
- ❀ Baby Shower
- ❀ Puberty Function
- ❀ Birthday Parties

**M. Uthamanathan Iyer**
No.12, Naveena Garden, Pillaithottam,
Puducherry - 605 013.
mahalakshmicateringservice03@gmail.com

**Contact :**

**92445 26474**
**92445 26475**
**84285 96947**



# ஸ்ரீ மாதா டிரஸ்ட்

**2000-ஆம் ஆண்டு முதல் ஏழை புற்றுநோயாளிகளின்**
**துயர் தீர்க்கும் "இலவச காப்பகம்"**



There has never been, nor will there ever be any gift equal to the gift of food..."
(Mahabharat - Anusasana Parva, 13.63.-6)



V Krishnamoorthy
Managing Trustee

பிரதி பலன் கருதாது நீ செய்யும் தர்மங்களால் கிடைக்கும் ஆனந்தமே மோக்ஷம். இது இப்பிறவியிலேயே கிடைக்கும். மறு ஜன்மம் வரை தர்மவான்கள் காத்திருக்க வேண்டாம்.

- ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி மஹாபெரியவர்

**ஏழை புற்றுநோயாளிகளுக்கு உணவு கொடுத்து அவர்கள் உயிர் வாழ உதவுவதே எங்கள் லட்சியம்... எந்நிலையிலும் இறைவன் அருளால் அதை நிச்சயம் தொடர்வோம்... உங்களது மேலான நிதி உதவியுடன்..!!**



அடையாறு புற்றுநோய் மருத்துவமனையில் சிகிச்சை பெறும் காலங்களில், நமது நம்ம தர்ம சாலாவில் தஞ்சம் புகும் ஏழை புற்றுநோயாளிகளை தனது உறவாக எண்ணி இருகரம் நீட்டி அன்புடன் அரவணைத்துக் கொள்கிறது நமது **நம்ம தர்மசாலா**. நம்ம தர்மசாலாவில் ஏழை புற்றுநோயாளிகளுக்கும், அவர்களது ஒரு உதவியாளருக்கும் மூன்று வேளை உணவு; தங்குமிடம் ஆகியவை ஏழை புற்று நோயாளிகளின் சிகிச்சை காலம் முழுவதும் **முற்றிலும் இலவசமாக** வழங்கப்படுகிறது. இதன் மூலம் அவர்கள் முறையான சிசிக்சையை, தடையின்றி பெற்று விரைவில் இந்நோயிலிருந்து விடுபடுகிறார்கள். **ஏழை புற்றுநோயாளிகள் பசியாற உதவிடுங்கள். உண்மையான இன்பம் இதுவே என்று உணர்ந்திடுங்கள்.**




தன்னிகரற்ற தயாள குணம் கொண்டுள்ள திரு **மயிலாப்பூர் துவாரகநாத்** - திருமதி **ஜானகி** அவர்கள், நமது நிர்வாக அறங்காவலர் அவர்களிடம், நமது இலவச முதியோர் இல்ல கட்டிட பணிக்கு ரூ.5,00,000/- நன்கொடை வழங்கி மகிழ்ந்தனர். இவ்வினிய நிகழ்வின் போது முதியோர் இல்ல கட்டிட பணிகளை பார்வையிட வந்திருந்த Arun Excello நிர்வாக இயக்குனர் திரு சுரேஷ் அவர்களும் உடனிருந்தார். திரு துவாரகநாத் அவர்கள், நமது நிர்வாக அறங்காவலர் அவர்களிடம், இந்த நன்கொடையை பல்லாண்டு காலம் தர்மம் நிலைத்து நிற்கக்கூடிய, ஸ்ரீ காஞ்சி பெரியவா நல்லாசி பெற்ற பூமியான உங்களது இலவச முதியோர் இல்லம் கட்டப்படும் இடத்தில் வைத்து கொடுக்க விரும்புகிறேன் என்று கூறினார். அதன்படி இவ்விருவரும் செங்கல்பட்டு வரை பயணம் செய்து தங்களது நன்கொடையை வழங்கி இலவச முதியோர் இல்லம் சிறப்பாக செயல்பட நல்லாசி வழங்கி மகிழ்ந்தனர்.



செங்கல்பட்டு, மாமண்டூர் கிராமத்தில் சுமார் 30,000 சதுர அடி பரப்பளவில் **ஸ்ரீ ஜயேந்த்ர பெரியவா நினைவு இலவச முதியோர் இல்லம்** பிரம்மாண்டமாக உருவாகி வருகிறது. இத்திருப்பணிக்கு சுமார் ரூ.**8 கோடி** தேவை என்கிற நிலையில், நல்ல மனிதர்களின் நல்லாசி மற்றும் தாராள நிதியுதவியை மனதார வேண்டுகிறோம். மேலும், முதியோர் இல்ல கட்டிடப் பணிகளுக்கு ரூ.5,00,000/- வழங்கும் நன்கொடையாளர்கள் விரும்பும் பெயரில் முதியோர் இல்லத்தில் முதியோர் தங்கும் அறை ஒன்று அமைக்கப்படும். தாங்கள் விரும்பிய நன்கொடை வழங்குவோரின் பெயர்களும் நமது இலவச முதியோர் இல்லத்தில் தகுந்த முறையில் பதிவு செய்யப்படும்.



An impressive view of our free old age home under construction at Mamandur.




Routine site inspection of our Managing Trustee

## தங்களது நன்கொடையை இவ்வாறு வழங்கலாம்

- ரூ.1,00,000/- நிதியளித்து நிரந்தர காப்பாளர் ஆகலாம்
- ரூ.75,000/- நிதியளித்து வள்ளல் ஆகலாம்
- ரூ.25,000/- நிதியளித்து "நம்ம தர்மசாலா"வின் ஒரு நாள் செலவினை ஏற்கலாம்
- ரூ.10,000/- நிதியளித்து ஒரு நாள் உணவு செலவினை ஏற்கலாம்
- ரூ.5,000/- நிதியளித்து மதிய / இரவு உணவு செலவினை ஏற்கலாம்
- ரூ.3,000/- நிதியளித்து காலை உணவு செலவினை ஏற்கலாம்

Kindly send your contribution by CHEQUE / NEFT / CASH / M.O.

Account Name: SRI MATHA TRUST Bank : INDIAN OVERSEAS BANK
Branch: Gandhi Nagar, Chennai-20 Current A/c No.:163502000001090
IFSC: IOBA0001635


வெளிநாட்டு வங்கியில் கணக்கு வைத்திருப்பவர்கள் தங்களது நன்கொடையை கீழ்காணும் எங்களது FCRA A/c-க்கு அனுப்பலாம்
NAME : SRI MATHA TRUST S.B. A/C No. : 40384754521
BANK : STATE BANK OF INDIA BRANCH : NEW DELHI MAIN BRANCH
IFSC : SBIN0000691 SWIFT : SBININBB104

Donations to our Trust is exempted U/S.80(G) of the Income Tax Act.

Sri Matha Trust PAN No. **AACTS9747G**

நன்கொடை வழங்கும் அன்பர்கள் தங்களது விலாசம் மற்றும் "PAN" நம்பரை எங்களுக்கு அனுப்பவும்.

Admin Office: 95/42, Flat No.3, Ground Floor, Rams Apartment, 2nd Main Road, Gandhi Nagar, Adyar, [next to Harini Skin & Laser Clinic] Chennai-20. Tel: 044 - 24420727, 42661687
Namma Dharmasala: 9, Yogi Garden, Sriram Nagar Main Road, Adjacent to IIT Compound, Near New Cancer Institute, Chennai-113. Tel: 044 - 4509 8647
9500001065 / 9003247857 vkrishnamoorthy.smt@gmail.com www.srimathatrust.org


வேதஸ்ரேணி
Mini Function Hall (A/C)
Traditional Ambience with Modern Amenities
Ayush Homam | Upanayanam | Birthdays | Engagement |
Sangeeth | Mehendi | Wedding | Valakaapu | Seemandham |
Shastiapthapoorthi | Sathabhishekam | Corporate Events
Ac Hall & Dining | Lift | Power Back Up | Car Parking |
CCTV | Hall Capacity- 150 -200 | Guest Rooms-2
Vedashreni, No 215, 3rd Street, Ramnagar Vijayanagar, Velachery, Chennai-42
95002 67471 | 98414 46897
VEG FOOD ONLY

# ராஜலட்சுமி கல்யாண மண்டபம்

*வேளச்சேரி மெயின் ரோடு, தண்டீஸ்வரம்,*
*சென்னை - 600 042.*




- *800 பேர் அமர்ந்து ஆசிர்வதிக்க ஏ/சி ஹால்.*
- *சகல வசதிகளுடன் கூடிய மணமகன், மணமகள் அறைகள்.*
- *உறவினர்கள் தங்க - குளிருட்டப்பட்ட அறைகள்.*
- *விசாலமான கார் பார்க்கிங்.*
- *வெகு அருகில் சிவன், பெருமாள் ஆலயங்கள்.*
- *நகருக்கு மத்தியில் அமைந்துள்ள பிரசித்தி பெற்ற மண்டபம்.*
- *24 மணி நேரமும தண்ணீர் & மாடுலர் கிச்சன் வசதி.*

தொடர்புக்கு

***48625585 / 9840545585***


VIJAY
JEWELLERS
SINCE 1973
PREMIUM QUALITY
NATURAL
DIAMONDS ONLY
LIFE TIME
SERVICE
NO 1
EXCLUSIVE DIAMOND SHOWROOM IN
PONDICHERRY
எங்களது விருக்ஷம் வைர நகை சேமிப்பு திட்டத்தில் தங்களை இணைத்து
கொண்டு நீங்கள் விரும்பிய வைர நகைகளை வாங்கி பயனடையுங்கள்.
49, VYSIAL STREET, PONDICHERRY

## சிருங்கேரி ஜகத்குரு ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த மஹா ஸ்வாமிகள் அருளியவை



### மனத்தூய்மை மிக அவசியமானது


ஓர் ஊரில் இரண்டு நண்பர்கள் வசித்து வந்தார்கள். அவர்களுள் ஒருவன், தனது முழு நேரத்தையும் பூஜை, ஜபம் முதலிய சமய வழிபாடுகளிலேயே செலவழித்து வந்தான். மற்றொருவனுக்கு பெண்களிடத்தில் அதிக மோகம் இருந்ததால், விபச்சாரிகளிடம் அவன் அடிக்கடி சென்று கொண்டிருந்தான். தன்னை சீர்திருத்திக்கொள்ள அவன் பலமுறை முயன்ற போதிலும், அவனால் தனது பழக்கத்தை மாற்றிக்கொள்ள முடியவில்லை. தன் நிலைமையை எண்ணி வெட்கப்பட்ட அவன், நண்பனைப் பார்த்துப் பொறாமைப்பட்டான். வேசியுடன் ரமித்து இருக்கையிலும், அவன் தன் நண்பனின் ஆன்மீக சாதனைகளைப் எண்ணிப் பார்த்து, தன்னால் நண்பனைப் போல் பக்தியோடு வாழ்க்கையை நடத்த முடியவில்லையே என தன்னைத்தானே நொந்து கொண்டான். மாறாக, பக்திமானாய் இருப்பவன், தனது பூஜை, ஜபம் முதலியவற்றில் ஈடுபட்டிருந்த சமயத்தில், தன் நண்பனின் விபரீதப் போக்கை நினைத்துக் கொண்டிருந்தான்.

இருவரும் மரணமெய்திய பின், பக்திமான் நரகத்திற்குக் கொண்டு செல்லப்பட்டான். அவன் நண்பனுக்கு சுவர்க்கத்தில் இடம் கிடைத்தது. இதைப் பார்த்து வெகுண்டெழுந்த பக்திமான், தனக்குப் பெரியதொரு அநீதி இழைக்கப்பட்டுவிட்டதாகவும், நண்பன் விஷயத்தில் தேவையற்ற வெகுமானம் அவனுக்கு அளித்துவிட்டதாகவும் முறையிட்டான்.

தொடரும்...

# தர்மத்தின் குரல் பூஜ்யஸ்ரீ பரமானந்த பாரதி ஸ்வாமிகள்

## அத்தியாயம் 3 : வேதங்கள்



*3-7 சென்றமாத தொடர்ச்சி..*

சில பெரியவையும் சில சிறியவையுமான மண் பானைகள் இருப்பதாக வைத்துக்கொள்வோம். அவற்றின் அளவுகளைப் பார்க்கும் ஒருவன், பெரிய பானையைவிடச் சிறிய பானை எடை குறைந்ததாக இருக்கும் என்ற முடிவுக்கு வருகிறான். ஆனால் எடை போட்டுப்பார்க்கும் போது சின்னதான பானை, பெரியதைவிட எடை அதிகமுள்ளதை உணர்கிறான். அதாவது, அவனுடைய கருத்து தவறானதென உணர்கிறான். அதாவது அவனுடைய கருத்து தவறானதென நிரூபிக்கப்படுகிறது. இந்த விஷயத்தில், பானைகளின் அளவு மட்டும் பார்க்கப்பட்டுப் புறத்தோற்றத்தின் அடிப்படையில் மட்டும் கருத்து சொல்லப்படுகிறது. இதற்கு மாறாக, பானைகளின் வெளித்தோற்றத்தைப் பாராமல், உட்புற அமைப்பை அதாவது அவை மண்ணால் ஆனவை என்பது கருத்தில் கொள்ளப்படும்போது, நம்முடைய கருத்து, அதிக மண்ணைத் தன்னுள் ஏற்றுக்கொண்ட பானை, அதைவிடக் குறைந்த அளவிளான மண்ணால் ஆன பானையைவிடக் கனமானது என்றாகிறது.

தொடரும்...

ஓம்

ஜய ஜய சங்கர!



ஹர ஹர சங்கர!

ஸ்ரீ சங்கர பகவத் பாதாசார்ய பரம்பராகத மூலாம்னாய சர்வக்ஞ பீடம்

# ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம்

**ஸ்ரீ சங்கர மடம் ஸ்ரீ மடம் சமஸ்தானத்தின் சேவை ஸ்தாபனம்**
**ஹிந்து சமய மன்றம் (1972) மாடம்பாக்கம் சேவைப் பிரிவு**

# ஜன கல்யாண் (1988)

ஸ்ரீசங்கரா, எண்.150, 6வது தெரு, மல்லிஸ்வரி,
சேலையூர் வழி, மாடம்பாக்கம், சென்னை - 600 126.

தொடர்புக்கு : 044 - 2229 1459 /
9840588593 (ராம் ராம் A. சுந்தரராம்) /
9677239848 (R.சாய்ராம், தலைமை ஒருங்கிணைப்பாளர்,
ஸ்ரீ மஹா பெரியவாளின் பிடி அரிசி திட்டசேவைப் பிரிவு /
9841057277 (V.பிரகாஷ்) / 9841745779 (V.C.ஸ்ரீகாந்த்) /
9445714499 (K.சங்கரன்)


## செயல்பாடுகள்

ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகளின் அருளாக்ஞைக்கேற்ப ஸ்ரீமடம் சேவைகளுடன் நேரிடையான மற்றும் இதர சத்சங்கங்களுடன் ஒருங்கிணைப்பு நற்பணிகள் : கல்வியில் உதவி (வித்யா விருக்ஷம்). மாதர்களின் திருவிளக்கு கூட்டு வழிபாடு, ஆன்மீக விழிப்புணர்வு பிரசுரங்கள், ஸ்ரீ காஞ்சி மஹா ஸ்வாமிகளின் உன்னதமான பிடி அரிசித் திட்டம் / அன்னதானம், சாதுர்மாஸ்ய விரத காலத்தில் வருடந்தோறும் ஸ்ரீ ஆசார்யாளுக்கு (சமஷ்டி) பிக்ஷாவந்தனம். சமஷ்டி உபநயன கைங்கர்யம். வேதபாடசாலை - வேதசம்ரக்ஷணம் - கோ சம்ரக்ஷணம், வேதபாட சாலைகளுக்கும், முதியோர் இல்லங்களுக்கும், வசதியற்ற ஆலய அர்ச்சகர்களுக்கும், தீபாவளி பண்டிகைக்காக புதிய வஸ்திரங்கள் வழங்குதல் மேலும் இதுபோன்ற பல்வேறு இதர சேவைகளும் தொய்வின்றி சிறப்புடன் தொடர, மனமுவந்து தங்களது தாராளமான நன்கொடையினை **'JANA KALYAN MADAMPAKKAM'** பெயருக்கு அனுப்பி வைத்திட இருகரம் கூப்பி பணிவன்புடன் பிரார்த்திக்கின்றோம்.

**ராம் ராம் / ஜன கல்யாண் மாடம்பாக்கம்**
**SELAIYUR UCO BANK SB A/C. NO : 02380110063620**
**IFSC CODE : UCBA0000238**

# மஹா பெரியவாளின் அற்புத விளக்கங்கள்

## ஹிந்து மதத்தின் பெருமை



எல்லோருக்கும் ஒரே தர்மம் என்று வைத்துக் கொண்டதோடு நின்றுவிட்ட மதங்களில் எல்லாம், உள்ளிருந்தோ அல்லது வெளியிலிருந்தோ வேறு தினுசான தர்மங்கள் வந்து தாக்கியபோது, அவை அடியோடு இற்று விழும்படியாயிற்று. இந்தியாவில் பல தினுசான தர்மங்களும் பொதுவான தர்மத்துக்குள் இருந்ததால், வேறு தர்மங்கள் உள்ளேயே எழுந்தால் அல்லது வெளியிலிருந்து வந்து தாக்கினால், அவற்றையும் தள்ள வேண்டியதைத் தள்ளி, கொள்ள வேண்டியதைக் கொள்வதற்காக இடம் கொடுக்க முடிந்தது. நம் நாட்டுக்குள்ளே புத்த ஜைன மதங்கள் வேதத்தின் ஒவ்வொரு அம்சத்தில் எழுந்தன; அதனால் ஹிந்து மதமே இவற்றையும் தனக்குள் ஜெரித்துக் கொண்டுவிட்டது. பல பலவாக தர்மங்கள் விரிந்து இருந்ததால், இன்னும் புதிசான பலவற்றுக்கும் இடம் தந்து தனதாக்கிக் கொள்ள முடிந்தது.


**ஸ்ரீ அதிருத்ர மஹா யக்ஞம் - 2024**

சென்னை

**ஜனவரி 26, 27, 28**

பங்குபெற விரும்புபவர்கள்

தொடர்பு கொள்ள வேண்டிய எண் :

**99949 26537 / 94451 02193**




LIC
भारतीय जीवन बीमा निगम
LIFE INSURANCE CORPORATION OF INDIA



**S. VENKATESAN**
LIC Agent (Insurance Advisor)
Code : 2340-75F
**Cell : 96293 07101**

**Off :** 100-A, Gandhi Road, Srirangam, Trichy - 620 006

**Res :** B1, S3, Akilandeeswari Block,
Thathachariyar Garden, Mambazhasalai,
T.V.Koil, Trichy - 620 005.



உ
ஸ்ரீ கல்யாண வெங்கட்ரமண ஸ்வாமி துணை

**ஸ்ரீ ரெங்கபிரியன் டிராவல்ஸ்**

100G, T.K.A, காம்பளக்ஸ், LIC ஆபிஸ் அருகில்,
ஸ்ரீரங்கம், திருச்சி - 620 006.



**எங்களிடம் டாடா இண்டிகா, இண்டிகா, Toyata Etios Liva, டவேரா, இன்னோவா, டெம்போ டிராவலர், Xylo, Hitech Van ஆகியவை புதிய ரகத்தில் வாடகைக்கு கிடைக்கும். மேலும் எங்களிடம் உள்ள அனுபவம் வாய்ந்த டிரைவர்கள் மூலம் தங்களுக்கு சேவை செய்து கொண்டிருக்கிறோம்.**

**9443650250 / 9842850250**

**T. சீனிவாசன் - 0431-2431717**
**Email : rengapriyantravels@yahoo.in**

## அறிவோம் ஆழ்மனதின் அளப்பறியா ஆற்றல்

திருச்சி கணேசன்

*சென்ற மாத தொடர்ச்சி...*

**முனைந்து கற்றால் முடியாதது ஏதுமில்லை :**

நாம் சிறிய வயதில் சைக்கிள் ஓட்டியதை நினைத்துப் பார்த்தால் இன்றும் சிரிப்பு வரும். எத்தனை முறை கீழே விழுந்து கை கால்களில் தழும்பு வரும் அளவு காயம் பட்ட போதும் விடாமுயற்சியுடன் முனைந்து செயல்பட்டு சைக்கிள் ஓட்டப் பழகினோம். அதே போல் ஸ்கூட்டர் / கார் ஓட்டக் கற்கும்போது (Learn செய்யும்போது) வண்டியில் ‘L' போர்டு போட்டுக்கொண்டு கற்றுக் கொள்கிறோம். நன்கு கற்றுக் கொண்ட பிறகு ‘L' போர்டைக் கழற்றி விடுகிறோம். எப்போதுமே ‘Learn' செய்யும் போது ‘L Board' இருக்கும் நன்கு கற்ற பின்னர் ‘L Board' போய் நாம் ‘Earn' செய்ய முடிகிறது. எதையுமே சிறப்பாக ‘Learn' செய்தால் பலவற்றை Earn செய்ய இயலும். பணம், புகழ், மதிப்பு, கௌரவம் மற்றும் அங்கீகாரம் இப்படிப் பலவற்றை அடையமுடியும். கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு என்பதை நாம் அறிவோம். இதே போன்று தான் நாம் முனைந்து செயல்பட்டு ஆழ்மனதிற்கு சுயகருத்தேற்றம் மூலம் கட்டளைகளாகக் கொடுத்துப் பயிற்றுவித்தால் நாம் வாழ்வில் அடைய நினைக்கும் அனைத்தையும் அடைய முடியும்.

**எவற்றை எல்லாம் ஆழ்மனதின் மூலம் அடைய முடியும்?**

1. எந்தத் துறையிலும் வெற்றி பெறலாம்.
2. வாழ்வில் மட்டற்ற மகிழ்ச்சி அடையலாம்.
3. அனைவருடனும் மனித நேயத்துடன் பழகும் மனப்பாங்கினைப் பெறலாம்.
4. தடைகளை தகர்த்தெறிய முடியும்.
5. பயத்தை ஒழிக்கலாம்
6. சிக்கல்களைக் களைந்தெறியலாம்

*7. எப்பொழுதும் இளமையோடு உற்சாகமாக இருக்க இயலும்.*

*8. நிறைய நண்பர்களைப் பெற இயலும்*

*9. எதிலும் எங்கும் எப்போதும் வெற்றி - தொடர் வெற்றி பெறலாம்.*

*10. பெற்ற வெற்றியை தக்க வைத்துக் கொள்ள முடியும்.*

*மேலே கூறியுள்ள இவை அனைத்தையும் நம் ஆழ்மனதின் மூலம் பழகிக் கொண்டால் இந்தியாவை உலக அரங்கில் ஒரு வல்லரசாக உருவாக்க இயலும்.*

*கடைசியாக ஒரு கவிதையைக் கூறி உங்கள் கனவுகள் வெற்றி பெற வாழ்த்துகிறேன்.*

*1. பிறரால் முடியும் என்றால் என்னால் முடியும்*

*2. பிறரால் முடியாது என்றாலும் என்னால் முடியும்*

*3. நிபுணர்களால் மட்டுமே முடியும் என்றால் என்னாலும் முடியும்.*

*4. நிபுணர்களாலும் முடியாது என்றாலும் என்னால் முடியும்*

*5. ஏன் என்றால் நான் மற்றவர்களை விட ஓர் அங்குலம் கூடுதலானவன்.*

*6. அந்த அங்குலமே முடிவுகளைத் தீர்மானிக்கும் அங்குலமாகும்.*

*7. அந்த அங்குலமே யானையையும் அசையவைக்கும் அங்குசமாகும்*

*8. ஓர் அடி முதலில் வைத்தால் ஓராயிரம் படிகள் முதலில் ஏறலாம்*

*9. ஓர் அடி முன்னால் எடுத்து வையுங்கள் ஒரு எட்டு முன்னால் செல்லுங்கள்.*

*10. வெற்றி உங்களுக்குத் தான் முதலில் கிட்டும் - எப்போதும் எல்லா வழிகளிலும்*

**இன்று முதல் நாம் ஒரு சபதம் எடுப்போம். முழு நம்பிக்கையுடனும் தீவிர கவனத்துடனும் நமது ஆழ்மனதில் சுயகருத்தேற்றம் செய்வோம்.**

**முற்றும்.**

# “ஆசான்”

மதுரை முரளி

சென்றமாத தொடர்ச்சி...

எல்லா வகையிலும், “படிப்பும், ஒழுக்கமும் இரண்டு கண்கள்” எனப் புரிய வைத்த ஒரு புனிதர். படிப்பு மட்டுமே ஒருவனை, நல்ல மனிதனாக உயர்த்த முடியாது. சுய ஒழுக்கம், தேசபக்தி, சமூகசேவை இப்படி.. பல விஷயங்கள். இதை, அவர்.. அந்த ஆசான், என்னோட அடி மனசுல பதிய வைச்சதினால தான். இப்ப நான் உங்க முன்னாடி நல்ல நிலையில் இருக்கிறேன். படபடவென பேசிய பிரகாஷ்

“நான் அவரைப் பார்க்கணும், உதவி செய்ய முடியுமா?” எனக் கைகூப்ப,

“திரும்ப, திரும்ப என்னையப் போய் கும்பிட்டு பெரியமனுஷனா ஆக்காதீங்க. சுவாரசியமான விஷயம் என்னன்னா... எனக்கும், அவர் தான் ஆசான். நான் நாலு வருஷத்துக்கு முன்னாடி இங்கே வந்தப்போ, அவர் தான் தலைமை ஆசிரியர். எல்லா வகையிலும் என்னோட வழிகாட்டி. இரண்டு வருடம் முன்னாடி தான் ஓய்வு பெற்று, பக்கத்துடவுனுக்கு இடம் மாறிட்டாரு.

“தயவு செய்து, நான் அவரை பார்க்கணும்”

“நிச்சயமா, அவரை இன்னிக்கு இரவே பார்த்திடலாம்” பேசிய அகிலன், தொலைபேசியில் தொடர்பு கொண்டான்.

சுவாமிநாதன் சம்மதம் தர,

பள்ளிக்கூடத்தை சுற்றிப்பார்த்த பிரகாஷ் புறப்பட்டான் அகிலனோடு

“சார் வணக்கம். நான் பிரகாஷ்”

வாசலிலேயே நின்று வரவேற்ற

சுவாமிநாதனிடம் பிரகாஷ் தன்னை அறிமுகப்படுத்திக் கொள்ள,

“வா, வா நல்லா இருக்கியாடா? என் மாணவனை எனக்கு தெரியாதா? என்ன பெரிய ஆளாயிட்ட! “சத்தமாய் சிரித்தார்.

“வாங்க, அகிலன் தம்பி. நலமா? “என வினவ,

“உங்க ஆசியில ரொம்ப நலமய்யா. பிரகாஷ் சார் உங்களை பற்றி ரொம்ப, ரொம்ப உயர்வா சொன்னார். உங்களைப் பார்க்கணும்னு விருப்பப்பட்டதால, அழைத்து வந்தேன்”.

“ரொம்ப சந்தோஷம். பிரகாஷ்.. ரொம்ப நல்ல மாணவன், படிப்பு, விளையாட்டுன்னு, பல வகையில்” பாசத்துடன் பிரகாஷை தட்டிக்கொடுக்க,

காலைத்தொட்டு வணங்கியவன்,

ஒரு சால்வையை சுவாமிநாதனுக்கு அணிவிக்க,

முதலில் மறுத்தவர், நிறைய வற்புறுத்தலுக்கு பின் ஏற்றுக்கொண்டார்.

நெகிழ்ச்சியான நினைவுகளை இருவரும் பகிர்ந்து கொண்டனர்.

“ஐயா, ஒரு சிறிய விண்ணப்பம். என்னோட இந்த நிலைக்கு.. வளர்ச்சிக்கு நீங்களே காரணம். பள்ளிப்பருவத்தில் அப்பா, அம்மாவுக்கு அடுத்து ஆசிரியர்கள் தான் எல்லாம் எதிர்கால வாழ்வின் வழிகாட்டி ஒளி விளக்கு.

தொடரும்....

**புதிய வேத வகுப்புகள் ஆரம்பம் (ONLINE)**

வார இறுதி நாட்கள் மாலை இரவு 7.30 முதல் 9.00 மணி வரை ஸந்த்யாவந்தனம், சூக்தங்கள், ப்ரம்ஹஸ்ரீ கைலாச கணபாடிகள் குருஜி, கும்பகோணம்.

: **94434 95950**

# அட்ட வீரட்டத் தலங்கள்

(செஞ்சொல்லரசு. மீ.சீனிவாசன், எம்.ஏ.எம்.எட்., பரமக்குடி)

## திருக்கோவிலூர் வீரட்டம்

சென்றமாத தொடர்ச்சி...

சிவபிரான் தனது கோபத்தை கடலில் விட அது குழந்தை உருவாகி பிரம்மதேவன் மடியில் விழுந்தது. அது அவரது தாடியைப் பிடித்து வருத்தியது. அதனாலும் நீரால் தாங்கப் பெற்றவன் என்பதாலும், இவன் ஜலந்தரன் எனப் பெயர்பெற்றான். இவன் வளர்ந்து தவஞ்செய்து, பலஅரிய வரங்களைப் பெற்று தேவர் முதலியோரை வருத்தினான். இறுதியில் சிவபிரானோடு போர்புரியச் சென்றான். சிவபிரான் அவன் எதிரில் கிழவனாய்த் தோன்றி அவன் எங்கு செல்வதாகக் கேட்க, அவனும் கயிலையில் சிவபிரானுடன் போர் செய்யப்போவதாகக் கூறினான். உடனே சிவபிரான் தான் கிழிக்கும் இவ்வளவு பூமியை எடுத்துவருமாறு கூறி, பூமியை வட்டமாகக் கிழித்தார். உடனே ஜலந்தரன் அதனைப்பெயர்த்து தன் தலையில் இட, அது சக்கரமாக மாறி அவன் உடலைக் கிழித்தது. வதம் நடந்தவுடன் அவன் மனைவி கதறிட, பிருந்தை எனப்படும் அவளை திருமால் தனது மார்பில் துளசி மாலையாக ஏற்றான். இந்த நிகழ்வு நடந்த இடமே விற்குடி ஆகும்.

நகரத்தாரால் திருப்பணி செய்யப்பெற்ற இக்கோவில் மிக அழகுடையது. மேற்கு நோக்கிய கோவில். ஐந்து நிலை ராஜ கோபுரம் உடையது. எதிரே சக்கரதீர்த்தம் எனப்படும் பெரிய குளம். வெளிப்பிரகாரத்தில் இறைவன் பிருந்தையை திருமாலுக்காகத் துளசியாக எழுப்பிய இடமும், திருமால் வழிபட்ட சிவாலயமும் உள்ளன. ஜலந்தரனைச் சம்ஹரித்த ஜலந்தரவதமூர்த்தி

உற்சவராய் உள்ளார். வலது உள்ளங்கையில் சக்கரம் ஏந்தியுள்ளார். ஏனைய கரங்களில் மான் மழு ஏந்தி ஒருவகை ஆயுதமுத்திரை தாங்கியுள்ளார்.

கருவறையில் மூலவர் சதுர ஆவுடையில் பாணவடிவமாக உள்ளார்.

இடப்புறம் பரிமளநாயகியாம் அம்பாள் தெற்கு நோக்கி சந்நிதி கொண்டுள்ளாள். நான்கு கரங்களுடன் நின்ற திருக்கோலம்.

கோவிலின் கிழக்கே விற்குடி மயானேஸ்வரர் கோயில் உள்ளது. இதனை மெய்ஞ்ஞானேஸ்வரர் கோயில் என அழைப்பர். இக்கோவில் வரலாறு திருவாசகம் திருச்சாழலில் மாணிக்கவாசகரால் குறிப்பிடப்பட்டுள்ளது.

சம்பந்தர் இங்குத் தேவாரம் பாடியுள்ளார். வள்ளலாரும் பாடியுள்ளார்.

இறைவன் : வீரட்டானேஸ்வரர்

இறைவி : ஏலவார் குழலி; பரிமளநாயகி

தலமரம் : துளசி

தீர்த்தம் : சங்கு தீர்த்தம், சக்கர தீர்த்தம்.

## 6. வழுவூர் வீரட்டம்

சோழநாட்டுத் தேவார வைப்புத்தலமிது. இவ்வீரச்செயல்தனைச் சம்பந்தர் திருநல்லூர் தேவாரத்திலும், அப்பர் திருச்சேறை தேவாரத்திலும், சுந்தரர் திருக்காளத்தி தேவாரத்திலும் பதினோராம் திருமுறையில் சிவபெருமான் அந்தாதியிலும் காணலாம்.

மயிலாடுதுறை - திருவாரூர் பேருந்து சாலையில் மங்கநல்லூர் முன்னால் உள்ள இடத்திலிருந்து 2 கி.மீ. தொலைவில் உள்ள தலமிது.

தொடரும்...

உ

திருமண பொருத்தம் இலவசம்

(அனைத்து சமூகத்தினருக்கும்)

வாட்ஸ்அப் மூலம் மட்டும்



பையன்கள் பெண்கள் ஜாதக நகல்களை
வாட்ஸ் அப்பில் அனுப்புதல் வேண்டும்.

Brahmin Kalyanam.com
An Auspicious Beginning ...
EXCLUSIVE PORTAL FOR BRAHMINS

BK MATRIMONY .com
An Auspicious Beginning ...

தேதியூர். V.J. ராமன்

ஆத்மார்த்த ஜோதிடர்

9003195599
9445230940

# பெற்றோர்களே! கவனியுங்கள்!

## (குழந்தை வளர்ப்பு)

காந்தலக்ஷ்மி சந்திரமௌலி பாகம் - 3 பகுதி - 34

பொதுவாக ஆசிரியர்களின் உடல்நிலை பற்றி பெற்றோர்கள் அதிகமாக கவனிப்பதில்லை. காரணம் தன் குழந்தைகளின் உடல்நிலை, பணக்கஷ்டம், வீட்டுப்பாடம் இவைகளைப் பற்றி கவனிக்கவே நேரம் போதவில்லை. இதில் ஆசிரியர்களைப்பற்றி யோசிக்கவே நேரமில்லை என்பது தான் பதிலாக பெற்றோர்களிடமிருந்து வருகின்றது.

இனி, ஆசிரியப் பெருமக்களுக்கே ஏற்படும் பிரச்சனைகளைப் பற்றி அறியலாம்.

நிறைய நேரம் நிற்பதால் கால்கள், கால் முட்டிகள் மற்றும் பாதங்களில் நிறைய வலி 40 வயதிற்குள்ளேயே ஏற்படுவதை கண்கூடாகக் காணலாம்.

இன்று பல பள்ளிகளில் ஆசிரியர்களுக்காக "மின்தூக்கி" வசதிகள் அமைக்கப்பட்டிருந்தாலும் பல பள்ளிகளில் ஏறி, இறங்கும் பணி அதிகமாக உள்ளது உண்மை தானே.

கையைக் குறிப்பாக வலது கையை தூக்கித் தானே கறுப்பு போர்டில் எழுத வேண்டும். அதனால் தோள்பட்டைகள், கைகள், கழுத்து வலி என்பது இவர்களுக்கு மிக, மிக அதிகம். இன்று "ஸ்மார்ட் போர்டு" (Smart Board) இப்பிரச்சனையைத் தீர்க்கின்றது என்றாலும் அனைத்துப் பள்ளிகளிலும் இவை இருப்பதில்லை.

சாக்பீஸின் தூசி என்பது கண்களுக்கு புலப்படாத ஒன்று. அது ஆசிரியர்களின் வாய் மூலமாக தொண்டைக்குள் படிவதை தடுக்க இயலாது. நான் அறிந்த பல ஆசிரியப் பெருமக்கள் தொண்டையில் "அலர்ஜி"யுடன் அவதிப்படுவதை பார்த்து வருத்தப்பட்டதுண்டு.

சதா பெரிய குரலில் பேச வேண்டிய கட்டாயம், ஓயாத குழந்தைகளின் ஆரவாரம் நிறைந்த கூச்சல் கேட்க வேண்டிய கட்டாயம் என்று பல வருடங்கள் பணி புரிவதால் "காது, மூக்கு, தொண்டை (ENT) பிரச்சனையில் மிக அதிகமாக பாதிக்கப்படுகின்றார்கள்.

பெண் ஆசிரியைகளுக்கு இதுபோக பிரசவம், குழந்தை வளர்ப்பு, குடும்பத்தை பேணுதல், அன்றாட பணிச்சுமை என்று கூடுதலான பிரச்சனைகள் ஏற்படுவதுண்டு.

பெற்றோர்களின் உடல்நிலை இன்றைய காலகட்டங்களில் எத்தகைய பாதிப்புகளை ஏற்படுத்துகிறதோ, அவை அனைத்தும் ஆசிரியர்களுக்கும் உண்டு என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

ஆசிரியர்கள் தலைகளில் கிரீடமும் சூட வேண்டாம். அவர்களை கால்களில் போட்டு மிதிக்கவும் வேண்டாம். நீங்கள் இருவருமே இந்த சமுதாயத்திற்கும், நாட்டிற்கும் அளிப்பது அருமையான, தைரியமான, உண்மையும், நேர்மையும் கொண்ட, தன்னம்பிக்கை மிகுந்த, தலைமைப்பண்பு கொண்ட ஓர் அடுத்த தலைமுறைஇந்தியனை உருவாக்குகிறீர்கள் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

பெற்றோர்களான நீங்கள் மட்டும் இதைச் செய்ய

இயலுமா? ஆசிரியர்களின் ஒத்துழைப்பும் தேவை. எனவே நம்மோடு, நம் குழந்தைகளுக்காக இணைபவர்களோடு ஒத்துழைப்பதில் என்ன கஷ்டம்?

ஆசிரியர்கள் நம் போன்றே வருடா வருடம் குழந்தைகளின் அறிவாற்றலின் வளர்ச்சியை கவனிப்பவர்கள். அவர்களுக்கு உங்களிடமிருந்தும், உங்கள் குழந்தைகளிடமிருந்தும் தேவை ஒன்று தான். மரியாதையுடன் கூடிய அன்பு அவர்கள் அளிப்பது கண்டிப்புடன் கூடிய அன்பு.

இந்த இரண்டிற்கும் இடையே உள்ள மெல்லிய இழை போன்ற இணைப்பு எக்காலத்திலும் துண்டித்து விடாமல் பெற்றோர்கள் நடந்து கொள்ள வேண்டும்.

“மறப்பினும் ஒத்துக் கொளலாகும் பார்ப்பான்
பிறப்பொழுக்கம் குன்றக் கெடும்”

(அதிகாரம் 14, குறள் 134)

“நூல்களை கற்பவன் கற்றதை மறக்க நேர்ந்தாலும், அதனை மீண்டும் கற்றுக் கொள்ளலாம். ஒழுக்கத்தில் குறைவுபட்டால் அவன் குடும்பப் பெயரே கெட்டுவிடும்” என்கிறார் திருவள்ளுவர்.

குழந்தைகளின் படிப்பு மட்டுமல்ல, உடல்ரீதியான கவனிப்பு மட்டுமல்ல மிக முக்கியமாக அக்குழந்தைகளின் குணநலன்கள், அறம் காக்கும் நற்பண்புகள் ஆகியவற்றைக்கவனிக்கும் பொறுப்பு பெற்றோர்களுடைய பொறுப்பு தான் என்பதில் கவனத்தைச் செலுத்துங்கள்.

தொடரும்...

# AURO MIRA MEDI AIDS

*House of Home Healthcare Products*

- Breast Pumps
- Blood Glucose Meters
- BP Meters
- Alpha Beds
- Adult Diapers
- Under Pads
- Wheel Chairs
- Physio Products
- Home Sleep Study
- Oxygen Concentrator
- CPAP / Bi Pap
- Pulse Oxymeters
- Nebuliser
- Morning Walker
- Weighing Scale
- Air Purifier




**முதியோர்களை சிறப்பாக பராமரிக்க தேவையான மருத்துவ உபகரணங்கள் எங்களிடம் சலுகைவிலையில் கிடைக்கும்.**

New No.36, Old No.32, Sriram Nagar Main Road,
Near I.I.T. Taramani, Chennai - 600 113.
**9382159199 | auromiramediaids@gmail.com**
**www.auromiramediaids.in**

# சாதனைப் பறவைகள்

டாக்டர்.ஷ்யாமா ஸ்வாமிநாதன்“

## “தாடகை என்றொரு சிவபக்தை - 3”



திருப்பனந்தாள் திருத்தலத்தில் எழுந்தருளியுள்ளார் ஸ்ரீ பெரிய நாயகி சமேத அருணஜடேஸ்வரர். திருக்கடையூரில் எழுந்தருளியுள்ளவர் ஸ்ரீ அபிராமி சமேத அமிர்தகடேஸ்வரர், அருணஜடேஸ்வரர் தன் பக்தை தாடகையின் பக்தியை உலகிற்கு உணர்த்துவதற்காக, தானே தன் தலையை சாய்த்து, அவள் சாற்றவிரும்பிய மலர் மாலையை ஏற்றுக்கொண்டார் என்றால், அமிர்த கடேஸ்வரர் தன் பக்தன் மார்கண்டேயனுக்காக யமனைத் தன் பாதங்களால் எட்டி உதைத்ததாக ஸ்தல வரலாறு சொல்கிறது. அபிராமி அம்மையோ, தன் பக்தன் அபிராமிபட்டருக்காக அமாவாசையன்று, தன் ஜொலிக்கும் தாடங்கத்தை வானில் வீசியெறிந்து, பட்டொளி வீசும் பௌர்ணமி நிலவினைத் தோற்றுவித்து, அரசனின் தண்டனையிலிருந்து காப்பாற்றினாள். அபிராமி அந்தாதியும் இங்கேதான் பிறந்தது.

ஸ்ரீ அருண ஜடேஸ்வரலிங்கத்தினை நிமிர்த்தப் போகும் பக்தர் குடும்பம், திருக்கடையூரில் இருந்தது. மிகவும் எளிமையான, ஏழ்மையான குடும்பம். தீவிர சிவபக்தரான அந்த குடும்பத் தலைவர், அடுத்தவேளை வயிற்றுப் பாட்டைப்பற்றித் துளிக்கூடக்

கவலையில்லாமல், தன்னிடம் இருந்த கொஞ்ச நஞ்ச நில புலன்களையும் விற்றுத்தீர்த்து சிவபெருமானுக்கு நறுமணம் மிகுந்த குங்குலியப் புகை மணத்தைப்போட்டு மகிழ்வதையே தன் உயிரினும் மேலான, தீவிர சிவத் தொண்டாகக் கருதி வந்தார். அதனாலேயே அவரது பெயரும் குங்குலியக் கலையனார் என்றாகியது. அருண ஜடேஸ்வரர் ஆன சிவபெருமான், தன் இந்த அத்யந்த பக்தரின் பக்தியை உலகோர் அறியச் செய்வதற்கு முடிவு செய்து "உன்னைப் போன்றஒரு பக்தைக்காக நாம் வளைந்து நின்றோம். உன்னைப் போன்ற ஒரு பக்தனால் மட்டுமே நாம் நிமிரவும் தீர்மானித்துள்ளோம்" என்கிறதன் எண்ணத்தை, குங்குலியக் கலையனார் மனைவியின் கனவில் வந்து சொன்னதுடன், அவர்களின் வறுமையையும் ஒரு க்ஷணத்தில் நீக்கி, மீண்டும் செல்வம் தழைக்கச் செய்தார்.

குங்குலியக் கலையனார் இந்த செய்தியால் மகிழ்ச்சியுற்று, ஊர் முழுவதும் மூச்சுப் பேச்சாக இருந்து கொண்டிருக்கும் அருண ஜடேஸ்வர லிங்கத்தை மீண்டும் பழையநிலைக்குக் கொண்டு வரயியலாத தான் இருந்துதான் என்ன பயன் என்று நினைத்து, ஒரு தீர்மானத்திற்கு வந்து அவருடைய சன்னதியில் தன்னாலான முயற்சிகளைச் செய்து, இயலாத பட்சத்தில் உயிர்த்தியாகம் செய்துவிடுவது என்றமுடிவோடு திருப்பனந்தாள் திருத்தலத்திற்குப் பயணப்பட்டு, சன்னதிக்கு வந்து சாய்ந்திருக்கும் லிங்கத்தைக் கண்டு கண்ணீர் வடிக்கிறார். அரசன் உள்பட, பலரின் பலவிதமான முயற்சிகளும்

பலனளிக்காத சூழல், அவர் மனதை வாட்டுகிறது. ஒரு முடிவெடுக்கிறார்.

அரசன் உள்பட அனைவரின் முன்பும், தன் கழுத்தைச் சுற்றி ஒரு தாம்புக் கயிற்றின் ஒரு பக்க முனையினால் முடிச்சு ஒன்றினை போட்டுக்கொண்டு, மறுபக்க முனையினை சாய்ந்திருக்கும் அருண ஜடேஸ்வர லிங்கத்தினைச் சுற்றி முடிச்சிட்டுவிட்டு, “பெருமானே, நீ தலை நிமிர்ந்து நிற்கும் வரை, உன்னை இழுத்துக்கொண்டே இருப்பேன்”, என்றுவிட்டு கண்களை மூடிக்கொண்டு சிவ பஞ்சாட்சர மந்திரத்தை ஓங்கி ஒலித்துக்கொண்டே, தன் உடல் திறன் அனைத்தையும் பிரயோகப்படுத்தி, எதிர் திசையில் இழுக்கிறார்.

தொடரும்..

## வேதபாரதியின் வாழ்த்துக்கள்

நமது வேதபாரதியின் உறுப்பினரும் அஷ்டபதி மாமி திருமதி.பத்மாவதி ஜெயராமனின் மகளுமான **Dr. சியாமளா** (Tamil Professor, Govt Arts College, Cuddalore) அவர்கள் எழுதிய (சீதையின் புத்ரிகள்) என்ற படைப்பு 2015 ஆம் ஆண்டிற்கான கம்பன் புகழ் இலக்கிய விருதுக்கு புதுச்சேரி அரசால் தேர்வு செய்யப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஆசிரியர்.

# இராமாயணம் தரும் படிப்பினை

சென்றமாத தொடர்ச்சி...

இந்த நேரத்தில் இராமர் பரதனுக்கு நீண்ட உபதேசம் செய்தார். ராஜ தர்மம் சம்பந்தமாக இது ஆட்சியாளர்களுக்கு ஒரு படிப்பினை. ஒரு அரசன் எப்படியிருக்க வேண்டும்?, அரசின் தர்மம் என்ன? என்பது பற்றிக் கூறுகிறார். அது கிட்டத்தட்ட மகாபாரதத்தில் சாந்தி பர்வத்தில் கிருஷ்ணர் வேண்டுகோளுக்கிணங்க ஸ்ரீ பீஷ்மர் பாண்டவர்களுக்கு உபதேசம் செய்தது போல், இந்த அறிவுரைகள் படி ஒரு மன்னன் ஆட்சி செய்தால் நிச்சயம் அது இராம ராஜ்யம் தான்.

ஒரு அரசன் நல்ல தர்மம், நீதி, நிபுணத்துவம், நல்ல குடும்பப் பின்னணி உள்ளவர்களைத் தான் மந்திரியாக நியமிக்க வேண்டும். அவர்களை அரசன் கௌரவமாக நடத்த வேண்டும்.

அரசன் தனியாக எந்த முடிவும் எடுக்கக்கூடாது. எந்தத் திட்டமும் ஒரு குழு அமைத்து தீர விசாரித்து ஆலோசனை செய்தபிறகே முடிவு எடுக்க வேண்டும். அவர்கள் அரச ரகசியத்தை காப்பவர்களாக இருத்தல் முக்கியம்.

அரசன் தனது அன்றாட வேலைகளைத் திட்டமிட்டுக் குறித்த நேரத்தில் செய்ய வேண்டும். திறமையான அமைச்சர்கள், அரசு அதிகாரிகள் மன்னனுக்கு புகழ் சேர்ப்பார்கள்.

மக்களுக்கு அரசன் மீது அவநம்பிக்கை ஏற்படாத அளவிற்கு நடத்தல், அவசியம் தன் கீழ் பணிபுரிபவர்களைக் கண்காணிக்க ஏற்பாடு செய்ய வேண்டும். அப்போது தான் நாட்டில் தவறு ஏற்படாமல் இருக்கும்.

ஆட்சியில் நாத்திக வாசம் தலையெடுக்கக் கூடாது. அதுபற்றி பேச்சு நடந்தால் முளையிலேயே அதைக் கிள்ளி எறிய வேண்டும்.

பெண்கள் பாதுகாப்பு மிகவும் முக்கியம். அவர்கள் நாட்டில் கௌரவமாக வாழ அரசன் வழி வகை செய்ய வேண்டும். வரவை விட செலவு குறைவாக இருக்க வேண்டும். அரசனை எளிதாகப் பார்க்கும் சூழ்நிலை நாட்டில் இருக்க வேண்டும். மக்கள் காலம், நேரம், இடம் போன்றவைகளைக் கருத்தில் கொண்டு செயல்பட வேண்டும்.

குற்றம் செய்தவர்கள் கண்டிப்பாக தண்டிக்கப்பட வேண்டும். மாறாக குற்றம் செய்யாதவர்கள் தண்டிக்கப்பட்டால் அவர்களது வேதனை, கண்ணீர் அரச குலத்தையே அழித்துவிடும். பாரபட்சம் இல்லாமல் எல்லோருக்கும் அரசன் நல்லது செய்ய வேண்டும்.

ஸுப்தேஷு ஜாக்ரதி என்று ஒரு சுபாஷிதம். தூக்கத்தில் கூட அரசன் விழிப்புணர்வோடு இருக்க வேண்டும். மிதமான தூக்கம் தான் அரசனுக்கு இருக்க வேண்டும். அரசன் என்பவன், மக்களுக்கு தொண்டு, சேவை செய்வது தான் தலையாய கடமை என்று உணர வேண்டும். மக்கள் நலனைக் கவனத்தில் கொண்டு வாழ்வதால் அரசன் தெய்வத்திற்கு அடுத்த நிலையில் வைத்துப் போற்றப்படுகிறான். சுயநலம் சிறிதும் இல்லாமல் அரசன் இருக்க வேண்டும். முன்னுதாரணமான குடிமகன் தான் மன்னன். குறைந்தபட்ச வாழ்க்கை முறையில் மன்னனுக்கும், மக்களுக்கும் இடையே பெரிய அளவில் பாகுபாடு இருக்கக் கூடாது.

இப்படி அரசன், ஆட்சியாளர்கள் கடைப்பிடிக்க வேண்டிய நியதிகளை இராமன் பரதனுக்குச் சித்திர கூடத்தில் எடுத்துக் கூறியது இன்றைய ஆட்சியாளர்களுக்கு பெரிய படிப்பினை.

தொடரும்...

**- காந்தாமணி நாராயணன்**

# தருவின் நிழலில்
# தோற்றா மரம் (Strychnos Potatorum)
## ஸ்டிரிக்னாஸ் பாட்டாடோரம்)

*சென்றமாத தொடர்ச்சி..*

*பொடி செய்யப்பட்ட தேத்தாங்கொட்டை துகள்களில் இருக்கும் கார்போ ஹைட்ரேட், வேதிப் பொருட்களையும், கன உலோகங்களையும் சேர்த்து உறிஞ்சி நீரைத் தெளிவாக்குகிறது. பத்து லிட்டர் தண்ணீரை சுத்திகரிப்பதற்கு இரண்டு தேத்தாங்கொட்டை இருந்தாலே போதுமானது. கரிபடிந்த நீரையும் குடிநீராக மாற்றும் இக்கொட்டை பக்க விளைவுகள் இல்லாத மற்றும் பணச் செலவும் இல்லாத சிறந்த குடிநீர் சுத்திகரிப்பான் ஆகும்.*

*நீரைத் தெளிய வைக்கும் தேற்றாங்கொட்டை என உலக நீரியல் மாநாட்டில் வல்லுநர்கள் இக்கொட்டைக்கு சான்றளித்துள்ளனர்.*

*தண்ணீரை சுத்திகரிக்கும் இக்கொட்டையைப் பற்றி சங்க இலக்கியங்களில் ஒன்றான கலித்தொகை,*

*“இல்லத்துக்காழ் கொண்டு தேற்றக்*
*கலங்கிய நீர்போல் தெளிந்து” (கலித்தொகை 142 : 64)*

*எனக் கூறுகிறது.*

*மேலும், இக்கொட்டையின் சக்கையை மீன்கள் வாழும் குளங்களில் தூவ, மீன்கள் ஒருவித மயக்க நிலைக்கு தள்ளப்பட்டு குளக்கரை ஓரங்களில் ஒதுங்குகிறது. இதனைப் பயன்படுத்தி மீன்களை எளிதாக பிடிக்கின்றனர்.*

*இத்தனை சிறப்புகள் நிறைந்த தேற்றாமரம், நாகை மாவட்டம், திருக்குவளை சிவாலயத்தின் தல விருட்சமாகும். இவ்வூர்த்தலம், பிரம தபோவனம். கதகாரண்யம் (தேற்றாமரவனம்), புஷ்பவனம் எனும் புராணப் பெயர்களைக் கொண்டுள்ளது.*

*அன்னை அருள்மிகு வண்டமர் பூங்குழலம்மையுடன் அருள்பாலிக்கும் அருள்மிகு*

*பிரம்மபுரீஸ்வரர் திருக்கோவில், பாடல்பெற்றசைவத் திருத்தலங்களின் வரிசையில், காவிரித் தென்கரையிலுள்ள 123வது சிவத்தலமாகும். அப்பர், சுந்தரர், சம்பந்தர் ஆகிய சமயக் குரவர்களால் பாடல் பெற்றசிறப்புடையது. மேலும், ஏழு விடங்கத்தலங்களில் ஒன்றான, இக்கோவிலின் தியாகராஜர், வண்டு நடனம் புரிந்த "அவனி விடங்கத்தியாகர்" ஆவார்.*

*இக்கோவிலில் நவக்ரஹங்கள் ஒன்பது பேரும் தெற்கு திசை நோக்கியவாறு அருள் பாலிக்கிறார்கள். பிரம்மா, விஷ்ணு, பாண்டவர்கள், முசுகுந்த சக்கரவர்த்தி, அகத்தியர், நவக்ரஹங்கள் வழிபட்ட சிறப்புக்கள் நிறைந்த திருத்தலம். நாமும் விருட்சத்துடன் ஈசனை தரிசிப்போம்.*

**ஆதிரையன்.**




Rs.1000 inclusive of tax
Wopper
COMBO OFFER
This pack contains:
Liquid Detergent 1 L - 1 No
Floor Cleaner 500 ml - 2 Nos
Toilet Cleaner 500 ml - 2 Nos
Fabric Conditioner 500 ml - 1 No
Vessel Wash 500 ml - 1 No
Multipurpose Cleaner 100 ml - 1 No
Hand Wash 100 ml - 1 No
Hand Rub 100 ml - 1 No
FREE
Contact
9952972436 / 7824807801
Shri Meera Labs Pvt Ltd
Our Chemistry ... Your Success
WOPPER
Fluid Chemistry

## ஒப்பன்ஹெய்மர்

இரண்டாம் உலகப் போரில் ஏற்பட்ட மாபெரும் அழிவான ஜப்பானின் ஹிரோஷிமா, நாகசாகி அணுகுண்டு வெடிப்பைப் பற்றி அனைவருக்கும் தெரிந்திருக்கும். உலகில் முதன் முறையாக அணுகுண்டு தயாரிக்கப்பட்டு பின்பு ஏவப்பட்டது, அமெரிக்காவில் இருந்துதான். இந்த அணுகுண்டை உருவாக்குவதற்கு அறிவியல் பின்புலமாக இருந்தது ஜெ.இராபர்ட் ஒப்பன்ஹைமர்.

கிறிஸ்டோபர் நோலன் இயக்கிய ஒப்பன்ஹெய்மர் திரைப்படம் சமீபத்தில் வெளியாகி உள்ளது. வரலாற்றில் யாராலும் மறக்க முடியாத அழிவை ஏற்படுத்திய ஒரு சம்பவத்தின் பின்புலமாக இருந்தவரின் மனப்போக்கு எவ்வாறு இருந்திருக்கும் என்பதை பற்றிய பார்வையாக இத்திரைப்படம் அமைந்துள்ளது. Fission – Fusion என இரு வேறு மனிதர்களின் (ஒப்பன்ஹைமர் மற்றும் விஸ் ஸ்ட்ராஸ் – அமெரிக்க அணு சோதனை தலைவர்) பார்வையில் இருந்து ஒரு வழக்கு விசாரணையாக இந்த திரைப்படம் தொடங்குகிறது.

அமெரிக்காவில் பிறந்த யூதரான ஒப்பன்ஹெய்மர், சிறு வயது முதலே இயற்பியலை கற்கிறார். பிரிட்டன் மற்றும் பல்வேறு ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்று (Quantum Physics) – (குவைய இயற்பியர்) பல்வேறு படிப்புகளை மேற்கொண்டு பின்பு அமெரிக்காவில் அணுகுண்டு சோதனை பணியில் அமர்த்தப்படுகிறார்.

ஒப்பன்ஹெய்மர் மற்றும் அவரது குழு ஜுலை 1954-ல் வெற்றிகரமாக அணு குண்டு சோதனை செய்து

முடிக்கிறார்கள். ஆனால் இந்த கண்டுபிடிப்பால் ஏற்படப்போகும் அழிவையும், தாக்கத்தையும் அவர் மனதிற்குள் பேரதிர்வலைகளை உருவாக்குகிறது. ஒப்பன்ஹைமர் மிக விரைவாக மொழிகளை கற்க கூடியவர் சமஸ்க்ரிதம் பயின்று பகவத் கீதையின் தத்துவங்களினால் ஈர்க்கப்படுகிறார். இந்த சம்பவம் நடந்த சில தினங்களில் தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் பகவத்கீதை தத்துவத்தை அங்கே சுட்டி காட்டுகிறார்.

ஸ்ரீ பகவானுவாஸா
காலோஸ்மி லோகக்ஷயக்ருத் ப்ரவ்ருத்தோ
லோகான்ஸமாஹர்துமிஹ ப்ரவ்ருத்தஹ
ருதேபி த்வாம் ந பவிஷ்யந்தி ஸர்வே
யேவஸ்திதா: ப்ரத்யனீகேஷு யோதா - கீதை 11.32

இதன் பொருள், பகவான் கிருஷ்ணன் அர்ஜுனனுக்கு சொல்வதாக,
நான் வலிமைமிக்க நேரம், உலகங்களை அழிக்க வரும் அழிவின் ஊற்று, உங்கள் பங்கேற்பு இல்லாவிட்டாலும் எதிரணியின் படையில் அணிவகுத்து நிற்கும் வீரர்கள் இல்லாமல் போய்விடுவார்கள்.

ஏன் இந்தக் கூற்றை ஒப்பன்ஹெய்மர் சொல்லியிருக்கலாம் என யோசித்தால், தன்னையே சமாதானப் படுத்திக்கொள்ள அவர் எடுத்துக்கொண்ட வழியாக தெரிகிறது. கீதையின் படி யோசித்தால், இந்த செயலை செய்வற்தகான கருவியாக மட்டுமே அவர் இருந்திருக்கிறார். இதன் மூலக் கூறு வேறு எங்கேயோ தொடங்கியுள்ளது. அவர் அதை ஒரு பணியாக மட்டுமே எண்ணி செய்துள்ளதாக விளங்குகிறது.

தொடரும்...

# வேதபாரதி திருச்சி - பெண்மையைப்போற்றுவோம்

*வேதபாரதி திருச்சி கிளையின் சார்பாக கடந்த ஆகஸ்ட் 13.08.2023 ஞாயிற்றுக்கிழமை ஸ்ரீரங்கத்தில் யுவஸ்ரீ நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது. 13 வயது தொடங்கி கல்லூரிவரை பயின்று முடித்த பெண்கள் சுமார் 45 பேர் கலந்து கொண்டு இந்நிகழ்வில் அவர்கள் அனைவருக்கும் இந்நிகழ்வில் பதிவு செய்தவுடன் வளையல் அணிவிக்கப்பட்டது.*

*செல்வி மதுரிமா சுபஸ்ரீ, சுஷ்மா மற்றும் புஷ்கரா ஆகியோர் பெண் குழந்தைகள் தாங்கள் அறிந்து கொள்ள வேண்டிய நமது கலாச்சாரம், நாம் பின்பற்றும் பல விஷயங்கள் மற்றும் பாரம்பரிய விஷயங்களை பகிர்ந்து கொண்டனர். விடை கிடைக்காத பல விஷயங்களையும் பகிர்ந்து கொண்டனர். முன்னதாக திரு.சந்திரசேகர், திருச்சி பகுதி வேதபாரதி பொறுப்பாளர் அவர்கள் இந்த பெண் குழந்தைகளை நமது பாரம்பரிய விளையாட்டுகளில் ஈடுபடுத்தி அவ்விளையாட்டுகள் மூலமாக அப்பெண் குழந்தைகளுக்கு விடாமுயற்சி, விட்டு கொடுத்தல் மற்றும் எல்லோரையும் அரவணைத்து செல்ல வேண்டிய அவசியத்தையும் விளக்கினார். குழந்தைகளின் பெற்றோர் தாங்கள் தெரிந்து கொள்ள வேண்டிய விஷயங்கள் குறித்து திருமதி.புவனேஸ்வரி விரிவுரையாளர் இந்திரா காந்தி கல்லூரி திருச்சி மற்றும் ஓரியண்டல் இன்சூரன்ஸ் நிறுவனத்திலிருந்து ஓய்வு பெற்ற திரு.சந்திரசேகர் அவர்கள் மற்றும் ஆல் இந்தியா ரேடியோ நம்பர் ஒன் ஆர்ட்டிஸ்ட் திருமதி.செங்கமலம் ஆகியோர் சாஸ்திர சம்பிரதாயங்கள் மற்றும் ஸ்லோகங்கள் ஆகியவற்றினை அன்றாடம் கடைபிடிக்க வேண்டிய அவசியம் குறித்தும் விளக்கினார்கள்.*

இறுதியில் ஓய்வு பெற்ற மதுரை சேதுபதி உயர்நிலைப் பள்ளி தலைமையாசிரியர் திரு.T.V. ரெங்கராஜன் அவர்கள் பெற்றோர் மற்றும் குழந்தைகள் இணைந்து தெரிந்து கொள்ள வேண்டிய விஷயங்களை குறித்து விளக்கமாக எடுத்துரைத்தார். இந்நிகழ்ச்சிகளை வேதபாரதி திருச்சி பொறுப்பாளர் திரு.சந்திரசேகர் அவர்கள் தொகுத்து வழங்கினார்.

முன்னதாக திருச்சி சங்கர மடத்தின் ஆடிட்டர்களில் ஒருவரான திரு.வெங்கடேஸ்வரன் அவர்கள் இந்த காலகட்டத்தில் இந்த மாதிரியான நிகழ்ச்சிகளின் அவசியம் குறித்தும் அந்த பணிகளை வேதபாரதி எடுத்து செய்வது நல்லவிஷயம் என்றும் இந்த நிகழ்ச்சியைத் துவக்கி வைப்பது பெருமையாக உள்ளது என்றும் தனது துவக்க உரையில் கூறினார்.

இறுதியாக திருச்சி வழக்கறிஞர் திருமதி.அகிலா ஸ்ரீவத்ஸன் அவர்கள் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்ட பெண் குழந்தைகள் மற்றும் பெற்றோர் தங்கள் குழந்தைகளை கவனமாக பாதுகாத்து கொள்ள வேண்டிய பல்வேறு விஷயங்கள் குறித்து விளக்கமாக உதாரணங்களுடன் பேசினார். இந்நிகழ்வின் ஒரு பகுதியாக குழந்தைகள் கோலாட்டம் மற்றும் கோலம் போடுதல் போன்றவை சிறப்பாக நடைபெற்றது.

வேதபாரதி மாநில செயலாளர் திரு.வெங்கட்ராமன் வரவேற்புரையுடன் துவங்கிய இந்நிகழ்வில் இறுதியாக வேதபாரதி பொறுப்பாளர் கும்பகோணம் திரு.இராமகிருஷ்ணன் அவர்கள் நன்றியறிவிப்புடன் இனிதே நிறைவு பெற்றது. கலந்து கொண்ட பெற்றோர் மற்றும் பெண் குழந்தைகள் மிகுந்த உற்சாகத்துடன் சென்றதை வேதபாரதி உற்று நோக்கியது. இந்நிகழ்ச்சியை திருச்சி பகுதி வேதபாரதி அங்கத்தினர்கள் தலைமையின் ஒருங்கிணைப்புடன் சிறப்பாக நடத்தி முடித்தனர்.


Best Wishes to
VEDABHARATHI
SSRC
Sri Sai Ram Construction
For your dream solutions
PROUD
BNI
MEMBER
Er. S. Sivanesan, B.Tech.,
1st Floor, N.B.S. Tower, John Selvaraj Nagar,
Kumbakonam, Thanjavur Dist.,
Tamilnadu, India - 612 001.
srisairamconstructionkum@gmail.com
Cell : 97864 24186


SANSHITECH
A9, 8th Cross PIPDIC Industrial Estate,
Mettupalayam, Pondicherry.
SRIMAWARE
BUCKETS
DUSTPAN
MAVU DAPPA @ AIRTIGHT CONTAINERS
HEIGHT ADJUSTABLE SCISSOR TABLE
FASHION 34 TUB
HEIGHT ADJUSTABLE SCISSOR TABLE
KITCHEN CONTAINERS
MUG 1LITRE & 1.5 LITRE
LILY 3.5LTR
LILY 10LTR
LUNCH BOX SMALL, MEDIUM & LARGE
Contact : 9443322774 / 6381808872 / 9444170774
e-mail: srimotherplast@gmail.com

MyNanganallur.com MNC
23A, 3rd Main Rd, Nanganallur, Chennai - 61.

Call for any assistance
9584 88 3333


Plumbing


Carpentry


Electrical


Painting


Construction & Renovation


Pest Control services


Interior Work


Sump & Tank Cleaning

# ஸ்ரீ கோகுல கிருஷ்ணா கோசாலை

## ஸ்ரீ கிருஷ்ணாமிருதம் பப்ளிக் சாரிடபள் ட்ரஸ்ட்

(80 G Available)

**756 பசுக்கள் பராமரிப்பு செய்யும் ஸ்தாபனம்**

1. கோ பூஜை செய்ய 2. கோ தானம் செய்ய
3. பசு பராமரிப்பு செய்ய
4. பிதுர்கள் திருப்தி அடைய – (மஹாளய பட்ச காலத்தில்)


பசு பாதுகாப்பு செய்வது கோடிபுண்ணியம்

தொடர்பு : **ஸ்ரீ நடராஜன்**
ஊத்துக்கோட்டை, திருவள்ளூர் - 602 023
**8940224744 / 9363111799**



# ஸ்ரீ சங்கரா இலவச முதியோர் இல்லம்

ஹிந்து சேவா சமாஜம் அறக்கட்டளை (Regd.)
பண்டித மேடு, திருப்போரூர் அருகில்

ஸ்ரீ காஞ்சி பெரியவர்களின் அருளாசியுடன், ஹிந்து சேவா சமாஜம் அறக்கட்டளை ஓர் இலவச முதியோர் இல்லத்தை திருப்போரூர் அருகில் உள்ள பண்டித மேடு கிராமத்தில் நிர்வகித்து வருகிறது. அங்கு 50 முதியவர்கள் அமைதியாக வாழ்ந்து வருகின்றனர்; இந்த நிர்வாகம் உங்கள் ஆதரவை நாடுகிறது:

திருமண நாள், பிறந்த நாள், நினைவு நாள் போன்றவற்றில் ஒன்றை தேர்ந்தெடுத்து ரூ.3000/- அளித்தால் முதியோர் இல்லத்தின் ஒரு நாளின் செலவுக்கு ஆகும்.

தங்களுக்கு விருப்பமான தொகையை கீழ்க்கண்ட விலாசத்திற்கு "ஹிந்து சேவா சமாஜம் டிரஸ்ட்" **(HINDU SEVA SAMAJAM TRUST)** என்ற பெயரில் காசோலை அல்லது கணினி வழி வங்கி கணக்கு மூலமாக நேரடியாக அனுப்ப வங்கி கணக்கு எண்.: **914010003352646**; ஆக்ஸிஸ் பேங்க், துரைப்பாக்கம் கிளை, **IFS CODE : UTIB0001566** அனுப்பலாம். கணினி வழியாக அனுப்புவோர் அவசியம் பணம் அனுப்பிய விவரத்தை கீழ்காணும் எண்ணுக்கு எஸ்.எம்.எஸ். செய்யவும். இவ்வுதவி செய்பவர்களுக்கு 80G பிரிவின்படி வரிச்சலுகை உண்டு.

**M. இராமகிருஷ்ணன்,** அறங்காவலர்
71, முதல் பிரதான சாலை, காந்தி நகர்,
அடையாறு, சென்னை - 600 020.
Cell : 93810 45601 | Email : amarabharathy7@gmail.com

# ஆரோக்கியம்

## 1. உறக்கமும் விழித்தலும்

பிறப்பின் அவசியம் பிறவாமையே என்பது ஞானப் பெரியோர்களின் வாக்கு. ஆன்ம சிந்தனையே பிறவாமைக்கு வழி என்பது ஞானப்பெரியவர்களின் வாக்கு. ஆன்மாவின் உறைவிடமோ உடல் ஆரோக்கியமற்ற உடல் ஆன்ம சிந்தனையில் ஈடுபட முடியாது போகும்.

உடல் லௌகீக வாழ்க்கைக்கும் அவசியமானது. ஆக, ஒவ்வொரு மனிதனும் தன் உடல் ஆரோக்கியத்தை பேணுவது முக்கியமாகும்.

உறக்கம் ஆரோக்கியத்தில் முக்கிய பங்கு வகிக்கிறது. நல்ல உறக்கம் வர நாம் கடைபிடிக்க வேண்டிய சில கட்டாய வழிமுறைகள் இதோ :

1. இயற்கையின் விதிப்படி சூரிய அஸ்தமனத்திற்கு முன் நாம் உணவு உட்கொண்டிருக்க வேண்டும். ஆனால் இன்றைய நடைமுறையில் நாம் அப்படி செய்வதில்லை. குறைந்தபட்சம் சாயங்காலம் 7.30 மணிக்குள் உணவு உட்கொள்ள முயற்சிக்க வேண்டும். நாம் கொண்ட உணவு ஜீரணமாக குறைந்தது 2 மணி நேரமாவது ஆகும். நாம் இரவு 10.00 மணிக்கு உறங்க செல்லும்போது உணவு ஜீரணமாயிருக்க வேண்டும். தாமதமான உணவு ஜீரணமாகாத நிலையில் உடல் உபாதைகள் வரக்கூடும்.

2. மாலை நாம் எடுக்கும் உணவும் எளிமையான சுலபமாக ஜீரணிக்க கூடிய சாத்வீக உணவாக இருப்பது அவசியம்.

தொடரும்...

**D. ராமன், பரளி**


MAKE YOUR
MONEY WORK
FOR YOU
INVEST AND INSURE WITH US IN,
MUTUAL FUNDS
LIFE INSURANCE
HEALTH INSURANCE
MOTOR INSURANCE
TRAVEL INSURANCE
PERSONAL ACCIDENT INSURANCE
Invest in Mutal Funds for acheiving your Financial goals and make your dreams come alive
Secure your Family against unexpected life and health risks
Avail Tax benifits for your investments and insurance
CONTACT:
8608970825
ramasubbums@gmail.com
WEALTH
FINANCIAL
PRODUCTS
DISTRIBUTORS
NETWORK


NANDHAN
Financial Planners
Rtn. Y.G. GOPIDASS, FchFP.,
Cell : 94431 16307
DIGITAL PROPERTY
Security
Liquidity
Yield
Family Protection
⇛ Life Time Rent
⇛ Return of Purchase Price
⇛ No Stamp - Duty
⇛ No Maintenance
⇛ No Natural Calamity Issues
⇛ No Litigation Issues
General Insurance
Health Insurance
Life Insurance
Mutual Funds
100% Tax Free & Tension Free Income
SERVICE :
◆ Life Insurance
◆ Health Insurance
◆ Motor Insurance
◆ Mutual Funds
◆ Chits
NANDHAN
Financial Planners
No.41, Thirunarayanapuram East,
Kumbakonam - 612 001.
LIC
LIFE INSURANCE CORPORATION OF INDIA
STAR
Health Insurance
Chola MS
RISK SERVICES

# ANATHA PRETHA KAINKARYA TRUST
# அநாத ப்ரேத கைங்கர்ய ட்ரஸ்ட்

Communication Address : S. SREEDHAR, 32, Ground Floor, Raja Nagar, 1st Main Road, Neelangarai, Chennai - 600 115.

Mobile : +91-9500005772, +91-9840243592, +91-9445378071

Email : dharmaa.apkt@gmail.com Website : www.dharmaa.org



## ஸ்ரீ காஞ்சி மஹா ஸ்வாமிகளின் அருளுரை
## தெய்வத்தின் குரல் 3ம் பாகம்
## அநாதைப் பிரேத ஸம்ஸ்காரம்
## இது தான் அச்வமேதம்

இதுவரை அச்வமேதத்துக்கு ஸமமான பலனைத் தருகிற ஒரு பணியைச் சொல்லவில்லை. மற்ற எல்லாவற்றையும் விட உயர்ந்ததான அந்தப் பணி என்னவென்றால், அதுதான் அநாதைப் ப்ரேத ஸம்ஸ்காரம்

**அநாத ப்ரேத ஸம்ஸ்காராத்**
**அச்வமேத பலம் லபேத்**

என்பது சாஸ்த்ர வசனம்

பர - உபகாரமாக, செத்துப் போன இன்னொரு ஜீவனுக்கு இதனால் உதவி பண்ணும் போதே, நமக்குப் பாபம் வராமல், கடமையைச் செய்து, நமக்கு உபகாரம் பண்ணிக் கொள்கிறோம்.

**இந்த அறக்கட்டளையின் நோக்கம்**

1. அநாத ப்ரேத ஸம்ஸ்காரம்
2. கர்த்தா ஏழையாக இருந்தால் அவர் செய்கின்ற தகன காரியங்களுக்கு உதவி செய்தல்.
3. நீத்தார் கடன், அந்த்யேஷ்டி இவைகளை குறித்து தர்மப்ரசாரம் செய்தல், பொது மக்களுக்கு விழிப்புணர்ச்சி ஏற்படுத்துதல்.
4. மருத்துவமனையில் பல மாதங்களாக கிடக்கும் ப்ரேதங்களை அரசு அல்லது நீதிமன்ற உத்தரவு பெற்று உரிய ஸம்ஸ்காரம் செய்தல்

**Contributions can be sent to :**
**A/c Name : Anatha Pretha Kainkarya Trust**
**Bank Name : Canara Bank, T.Nagar Branch**
**SB A/c No : 0917101048526 / IFSC Code : CNRB0000917**

**Cheques should be sent to the communication Address listed on top of this page. The donors are requested to send an email to dharmaa.apkt@gmail.com with full details of transfer, Address, email and contact Number.**


CITY UNION BANK
CUB
City Union Bank introduces
" Voice Biometric Authentication"
in CUB All in One Mobile Banking App
in Association with
KAIZEN VOIZ
simple-seamless-secure
IDRBT
Explore, Enable, Excel
VOICE
BIOMETRIC
"Your voice is your password"

RNI No. : TNTAM/2016/73726 REGD No. : TN/CC(S)DN/571/21-23



Date of Publication First Week of Every Month
Licenced to Post without Pre Payment - TN/PM G (CCR) / WPP 605/21-23
Posted at Patrika Chennai, Egmore.
Posted between 1 - 7th October 2023



வாழ்க்கையில் எத்துனை துன்பங்களை கடந்த போதிலும்
அதிலிருந்து மீள்வதற்கும், நம்பிக்கை பெறுவதற்கும்
இருப்பது மழலையின் சிரித்த முகம் ஒன்றே...

தரமான நகைகளுக்கு
சரியான முகவரி....

சூர்யா ஜுவல்லர்ஸ்®

287, 288, புளியமரச்சந்து, ஈஸ்வரன் கோவில் வீதி, திருப்பூர் - 4. போன் : 0421 2241829

97862 41829 www.suryajewellers.co.in

To

If not delivered please return to

**VEDABHARATHI**

No.31, Seshadripuram 1st Main Road, Baby Nagar, Velachery, Chennai-42.